வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 25.02.2025 செவ்வாய்க்கிழமை | இதழ் : 56 | பக்கங்கள் : 12

### உள்ளூராட்சி தேர்தல் விவகாரம்

# ரெலோவை கலந்துரையாட அழைக்கிறது தமிழ் அரசு கட்சி

பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம், பெப்வரி 25

**எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் விரிவான கலந்துரையாடல் ஒன்றை நடத்துவதற்கு வருமாறு தமிழீழ விடுதலை இயக்கத்துக்கு (ரெலோ) இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் அழைப்பு விடுத்துள்ளார்.**

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஒரே நிலைப்பாட்டில் உள்ள தமிழ்க் கட்சிகள் எவ்வாறு எதிர்கொள்வது தொடர்பில் கட்சிகளுக்கு இடையில் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தும் விதமாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இது குறித்து தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறுவதால் தான் கொழும்பில் நிற்பதாகவும் குறித்த திகதி ஒன்றில் இந்தக் கலந்துரையாடலை நடத்தலாம் எனவும் பதில் வழங்கியுள்ளார்.

இந்தக் கலந்துரையாடலானது இவ்வார இறுதியில் இடம்பெற உள்ள நிலையில் ஏற்கனவே தமிழ்த் தேசியக்

11

# 3000ஆவது நாளை எட்டிய போராட்டம்




வவுனியா, பெப். 25

வவுனியாவில் தமிழர் தாயகக் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் சுழற்சிமுறை போராட்டத்தின் 3000 ஆவது நாளான நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் வவுனியா தபால் திணைக்களத்துக்கு அருகில் 3000 ஆவது நாளாக போராட்டம் மேற்கொள்ளும் கொட்டகைக்கு முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

11

## மலையக மக்களின் மேம்பாட்டுக்கு அரசின் கொள்கை திட்டம் என்ன?

### சபையில் மனோ கணேசன் கேள்வி



கொழும்பு, பெப். 25

மலையக பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டுக்கான தமது கொள்கைத்திட்டம் என்னவென்பதை தேசிய மக்கள் சக்தி வெளிப்படுத்தவேண்டும் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு

11

## மூத்த எழுத்தாளர் கே. ஆர். டேவிட் காலமானார்!

யாழ்ப்பாணம், பெப். 25

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் கே. ஆர். டேவிட் (வயது - 80) நேற்று திங்கட்கிழமை காலமானார். வயது மூப்பு மற்றும் உடல்நலக் குறைவால் ஆனைக்கோட்டையில்

11

## காணாமலாக்கப்பட்ட மகனை 16 வருடம் தேடிவந்த தாய் வவுனியாவில் உயிரிழப்பு

வவுனியா, பெப். 25

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் சுழற்சி முறை போராட்டத்தின் 3000ஆவது நாளான நேற்று திங்கட்கிழமை தனது மகனைத் தேடிவந்த தாய் ஒருவர் சுகயீனம் காரணமாக உயிரிழந்தார்.

வவுனியா தோணிக்கல்லைச் சேர்ந்த 79 வயதுடைய தாயே உயிரிழந்தார்.

இவரின் மகன் 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் காணாமல் ஆக்கப்பட்டார்.

உயிரிழந்த தாயார் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு போராட்டங்களில் முன்னின்று போராடி வந்தவராவார் (அ)

## படைகளில் இருந்து தப்பியவர்களை உடனடியாக கைது செய்ய உத்தரவு

கொழும்பு, பெப். 25

பாதுகாப்புப் படைகளிலிருந்து தப்பியோடியவர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு பாதுகாப்புச் செயலர் சம்பத் துய்யகொந்த உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுக் காலை நடைபெற்ற பாதுகாப்புச் சபை கூட்டத்தில், நாட்டில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. இதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அண்மையில், இலங்கையில் நடைபெற்ற பல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், பாதாள குழுச் சம்பவங்களுடன் இராணுவத்தில் இருந்து தப்பி சென்றவர்கள், முன்னைய இராணுவ

11

## தரைவழி பயணங்களை அநுர தவிர்க்கவேண்டும்

### ரவி கருணாநாயக்க வலியுறுத்து

கொழும்பு, பெப். 25

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தனது பயணங்களுக்காக ஹெலிகொப்டரை பயன்படுத்தவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் வரவு-செலவு திட்ட விவாதத்தில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு

11

## மின்சார கட்டணத்தை மீண்டும் சீரமைக்கும் நிர்ப்பந்தத்தில் அரசு

கொழும்பு, பெப். 25

எதிர்வரும் காலத்தில் மீண்டும் மின்சார கட்டணத்தை மறுசீரமைக்க நேர்ந்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

சக்தி வலு அமைச்சர் குமார ஜயக்கொடி, மாத்தளையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் வைத்து இதனைக் கூறியுள்ளார். நாட்டில் நிலவும் உஷ்ணமான காலநிலை காரணமாக மின்னுற்பத்திக்கு அதிகப் பிரயத்தனம் எடுக்கவேண்டியுள்ளது.

இதனால் எதிர்வரும் காலத்தில் மின்சாரக் கட்டணத்தைச் சீரமைக்கவேண்டிய நிர்ப்பந்தம்

11

## தேசிய பாதுகாப்பு தொடர்பில் அரசு மேலதிக வகுப்புக்கு செல்லவேண்டும்

### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



கொழும்பு, பெப். 25

தற்போதைய அரசாங்கத்துக்கே தேசிய பாதுகாப்பு தொடர்பான மேலதிக வகுப்புகளுக்கு செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

யட்டியந்தோட்டை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து

11

## வவுனியாவை சேர்ந்த குடும்பம் இராமேஸ்வரத்தில் தஞ்சம்!

வவுனியா, பெப். 25

வவுனியாவைச் சேர்ந்த நால்வர் கடல் வழியாகத் தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்தை சென்றடைந்துள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இலங்கையர்கள் நால்வர் இராமேஸ்வரத்தை வந்தடைந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கணவன், மனைவி மற்றும் இரு பிள்ளைகளே இவ்வாறு இராமேஸ்வரத்தை சென்றடைந்தனர்.

குறித்த நால்வரையும் இந்தியக் கடலோர காவல்படை மீட்டு இராமேஸ்வரம்

11

## மீனவர்களை கட்டுப்படுத்த தவறியுள்ளது தமிழக அரசு

### மன்னார் மீனவர் சங்கம் குற்றச்சாட்டு

மன்னார், பெப். 25

தமிழக அரசு சட்டவிரோதமான முறையில் இலங்கைக் கடற்பரப்பில் நுழைகின்ற மீனவர்களைக் கட்டுப்படுத்த தவறியுள்ளதென மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் என்.எம். ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாத செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிடின் ஆபத்து

## சரத் வீரசேகர தெரிவிப்பு



கொழும்பு, பெப். 25

அரசாங்கம் இனவாதச் செயல்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத்தவறும் பட்சத்தில் நெருக்கடியை சந்திக்க நேரிடும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இனவாதத்துக்கு இடமளிக்கப்போவதில்லை என ஜனாதிபதி யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தின்போது கூறினார். ஆனால், யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரை விடயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இனவாதப் போக்கில் செயற்படுகின்றார். அவருக்கு எதிராக அநுர அரசாங்கம் எத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுக்கப்போகின்றது.

அதேபோன்று சுதந்திரதினத்தன்று யாழ்ப்பாணம் பல்லைக்கழகத்தில் கறுப்பு கொடி ஏற்பட்ட விடயம் இடம்பெற்றது. குறித்த விடயம் இனவாதச் செயல் இல்லையா எனவும் வினவ விரும்புகின்றோம். இத்தகைய இனவாத செயல்பாடுகள் தொடர்ந்தால் இனங்களுக்கு இடையில் குழப்ப நிலை ஏற்படும். அந்த விடயம் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை தோற்றுவிக்கும்.

கண்ணுக்கு புலப்படும் இனவாத செயல்பாடுகளுக்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள அரசாங்கம் தவறும் பட்சத்தில் பெரும்நெருக்கடிகளை சந்திக்க நேரிடும்-என்றார்.

# உரும்பிராய் உதவும் நண்பர்களின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம்!

யாழ்ப்பாணம், பெப். 24

உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இரத்த தான முகாமில் 31 பேர் பங்கேற்று குருதிக் கொடையளித்தனர்.

உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பு புலம்பெயர் வாழ் நண்பர்களின் அனுசரணையில் 11ஆவது ஆண்டாக இந்த இரத்த தான முகாமை ஏற்பாடு செய்திருந்தது.

நகுலேஸ்வரன் விஜயசன் நினைவாக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் மேற்கு இளைஞர் சனசமூக நிலைய மண்டபத்தில் உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பின் தலைவர் ந. விஜயதரன் தலைமையில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

இந்த இரத்த தான முகாம் நிகழ்வை யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்து கொண்டு மங்கல விளக்கேற்றி, ஆசிகள் வழங்கி ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பினர், கிராமத்தவர்கள் மற்றும் ஆர்வலர்கள் என 31 பேர் ஆர்வத்துடன் கலந்து கொண்டு குருதி கொடை வழங்கினர். இவர்களுள் 6 யுவதிகளும் அடங்குவர்.

இரத்ததான முகாம் நிகழ்வில் பங்குபற்றிய அனைவருக்கும் பயன்தரு மரக்கன்று, தேநீர் கோப்பை மற்றும் பாராட்டு சான்றிதழ் என்பன வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)



# தையிட்டி விகாரை பிரச்னையை 6 மாத காலத்துக்குள் முடிப்போம்

## சிவசேனை அமைப்பு உறுதி

யாழ்ப்பாணம், பெப். 25

தையிட்டி விகாரை பிரச்னையை தாம் ஆறு மாத காலத்துக்குள் தீர்த்து வைப்போம் என சிவசேனை அமைப்பினர் உறுதி அளித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

மக்களின் காணி மக்களுக்கே என்பதில் நாமும் உறுதியாக இருக்கிறோம். இது தொடர்பில் தையிட்டி விகாரை அமையப் பெற்றுள்ள காணி உரிமையாளர்களுடன் நாம் பேசவுள்ளோம்.

அவர்களுடன் பேசிய பின்னர் விகாராதிபதியுடனும் பௌத்த மத தலைவர்களுடனும் பேசி, விகாரை தொடர்பான பிரச்னையை முடிவுறுத்துவோம்.

அதற்கு எமக்கு குறைந்தது 6 மாத காலமாவது வேண்டும். அதற்குள் தமது அரசியலை செய்ய முயன்று அதனை குழப்பவேண்டாம் என கோருகிறோம்-என்றார். (அ)

# 2024இல் மதுபான நுகர்வு வீழ்ச்சி!

கொழும்பு, பெப். 25

முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த 2024 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் மதுபான நுகர்வு 9.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

மதுவரி 14 வீதமாக அதிகரிக்கப்பட்டமையால் இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2023 ஆம் ஆண்டில் 28.2 மில்லியன் லீற்றராக காணப்பட்ட மதுபான நுகர்வானது 2024 ஆம் ஆண்டில் 27.2 மில்லியன் லீற்றராக வீழ்ச்சியடைந்துள்ளது.

எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் மாத்திரம் 167.7 பில்லியின் ரூபாய் மதுவரி வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20.8 சதவீத அதிகரிப்பு என்பதுடன், கடந்த 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் மதுவரி வருமானம் 138.8 பில்லியன் ரூபாயாக பதிவாகியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நிதி அமைச்சில் பதிவு செய்த வாகனங்களை காணவில்லை

கொழும்பு, பெப். 25

நிதி அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 257 வாகனங்களில் 176 வாகனங்களின் இருப்பை உறுதி செய்ய முடியவில்லை என தேசிய தணிக்கை அலுவலகம் வெளியிட்ட தணிக்கை அறிக்கை தெரிவித்துள்ளது.

இவற்றில், 99 வாகனங்களின் எந்தவொரு தகவலும் தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

நிதி அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்ட அனைத்து வாகனங்களின் இருப்பு மற்றும் உரிமையை சரி பார்க்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று தணிக்கை பரிந்துரைத்துள்ளது.

இதேவேளை, இந்த 176 வாகனங்கள் தொடர்பான தகவல்களைக் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நிதியமைச்சின் பிரதம கணக்கியல் அதிகாரி தணிக்கைக் குழுவுக்கு தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவல், 2023 ஆம் ஆண்டுக்கான நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சால் வெளியிடப்பட்ட தணிக்கை அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. (அ)

# பொலிஸ் பொறுப்பதிகாரிகளின் இடமாற்றம் குறித்து முரண்பாடு

கொழும்பு, பெப். 25

தேசிய பொலிஸ் ஆணைக்குழு மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய இடையே பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளின் இடமாற்றம் தொடர்பாக கடுமையான முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த சர்ச்சை அரசமைப்பு பேரவை வரை சென்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றங்களை செய்வதற்கான அதிகாரத்தை தனக்கே வழங்குமாறு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு கடிதம் எழுதியிருந்தார். எனினும், இந்தக் கோரிக்கையை தேசிய பொலிஸ் ஆணைக்குழு நிராகரித்துள்ளது.

பொலிஸ் திணைக்களத்தின் உள் நிர்வாக நடவடிக்கைகளில் தேசிய பொலிஸ் ஆணைக்குழு தலையிடுவதாகக் கூறி, பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றங்கள் தொடர்பான அதிகாரத்தை தனக்கு வழங்கவேண்டும் என பதில் பொலிஸ் மா அதிபர் கோரியிருந்தார். மேலும், இதற்கான சட்ட அனுமதி இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சட்ட மா அதிபரின் பரிந்துரையின்படி, புதிய நியமனங்கள் அல்லாது, ஏற்கனவே பதவியிலிருக்கும் பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றங்களை மேற்கொள்வதற்கான அதிகாரம் பதில் பொலிஸ் மா அதிபருக்கு இருக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது. எனினும், தேசிய பொலிஸ் ஆணைக்குழு தனது நடைமுறையிலிருந்து விலக முடியாது என்றும், உரிய நடைமுறைகளுக்கு அமையவே செயற்படப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

தற்போது ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி லலித் ஏக்கநாயக்க தலைமையில் செயற்படும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் ஓய்வுபெற்ற அமைச்சுச் செயலாளர் ரேணுகா ஏக்கநாயக்க, ஓய்வு பெற்ற மாவட்ட செயலாளர் கே. கருணாகரன், சட்டத்தரணி தில்சான் கபில ஜெயசூரிய, ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.ஏ.எம். இலியாஸ் மற்றும் ஓய்வு பெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெயந்த ஜெயசிங்க ஆகியோரும் உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்த விவகாரம் தற்போது அரசியலமைப்பு பேரவையின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (அ)

# மூதாட்டி சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 25

பார்வையிழந்த மூதாட்டி அவரது வீட்டு வளவில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

யாழ்ப்பாணம், கோப்பாய் தெற்கைச் சேர்ந்த பிறவுண்ராசா நாகேஸ்வரி (வயது -78) என்ற மூதாட்டியே சடலமாக மீட்கப்பட்டார்.

மூதாட்டியின் கணவன் சில வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்த நிலையில் தனது சகோதரரான வயோதிபருடன் மூதாட்டி வசித்து வந்தார். நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வீட்டு வளவில் உயிரிழந்த நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக யாழ் . போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ)

# 25 வருட போராட்டத்தின் பின்னர் காணி உரிம பெயர்கள் வெளியீடு

வவுனியா, பெப். 25

காணி உரிமையைப் பெறுவதற்காக 25 வருடங்களாகப் போராடிய வவுனியா பண்டாரிகுளம் மக்களுக்கு இப்போது பலன் கிடைத்திருக்கிறது.

வவுனியா பண்டாரிகுளம் பகுதியில் வசிக்கும் 83 குடும்பங்களுக்கான காணி உரித்துக்கான பத்திரங்கள் கிடைக்கப்பெறாத நிலையில் 25 வருடங்களாக அவற்றைப் பெறுவதற்கு காணி உரிமையாளர்கள் பல்வேறு தரப்பினர்களுடன் முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் நேற்று குறித்த காணி உரிமையாளர்களுக்கான பத்திரங்களை வழங்குவதற்கான பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியல் பிரதேச செயலகத்துக்கு கிடைக்கப் பெற்று இருப்பதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இதன் காரணமாக 25 வருடமாக தமது காணிக்கான உரிமையை பெறுவதற்காக போராடியதன் பலனை அடைந்திருப்பதாக அவர்கள் கூறினர்.

குறித்த காணிக்கான உரிமையை பெறுவதற்கு எந்த அரசியல்வாதிகளும் தமக்கு துணையாக இருக்கவில்லை எனவும் அவர்கள் கவலை வெளியிட்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
25.02.2025 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மாசி 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஒன்பது கட்சிகளின் தேர்தல் கூட்டு

கடந்த பொதுத் தேர்தலில் மோசமான தோல்வியை சந்தித்திருந்த ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர், அதுவரையில் குறித்த கூட்டணியுடன் முரண்பட்டு வெளியில் நின்ற கட்சிகளுடன் ஒன்றிணைந்து உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ளும் முடிவுக்கு இணங்கியிருக்கின்றனர். பாராளுமன்றத் தேர்தலின் போதே இவ்வாறானதொரு கூட்டணி தொடர்பில் சிலர் பரிந்துரைத்திருந்த போதும், ஒரு சிலரின் தனிப்பட்ட நலன்கள் அந்த முயற்சியை தடுத்திருந்தது.

எனினும் பாராளுமன்றத் தேர்தலில், தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த ஆதரவானது, தமிழ்க் கட்சிகளை கலக்கமடையச் செய்திருக்கின்றது. இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கும் அந்தக் கலக்கம் இருந்தாலும் கூட, தங்களை ஒரு பிரதான கட்சியாக அடையாளப்படுத்தி வரும் நிலையில், தனித்துத் தேர்தலை எதிர்கொள்ளும் முடிவில் அந்தக் கட்சி பயணிக்கின்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வழமைபோல் அதன் தனியொருவன் வழியில்...!

உள்ளூராட்சித் தேர்தலின்போதும், தேசிய மக்கள் சக்தியின் சவால்களுக்கு தமிழ் கட்சிகள் முகங்கொடுப்பது தவிர்க்க முடியாதது. இந்த நிலையில் ஒன்பது கட்சிகளின் தேர்தல் இணக்கப்பாடு வரவேற்கத்தக்க விடயம்தான். ஆனால், இவ்வாறான தேர்தல் கூட்டுகள் கடந்த காலத்திலும் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், தேர்தலின் போது அல்லது தேர்தலுக்கு பின்னர் கட்சிகள் சிதறிப்போன கதையே தமிழ்ச் சூழலுக்கு நெருக்கமானது. இந்த நிலையில் ஒன்பது கட்சிகளின் இணக்கப்பாடு எவ்வாறு நடைமுறையில் - ஒரு தேர்தல் கூட்டு என்பதைத் தாண்டி ஒரு பலமான கூட்டணியாக பயணிக்கும் என்னும் கேள்வி எழுவது இயல்பானது.

தமிழ் கட்சிகள் யதார்த்தத்தை உணர்ந்து கீழிறங்கி வருவதானது எப்போதும் ஒரு பொது எதிரியை அடிப்படையாகக் கொண்டுதான் இடம்பெறுவதுண்டு. இன்றைய சூழலில் அந்தப் பொது எதிரி தேசிய மக்கள் சக்திதான். தேசிய மக்கள் சக்தி கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் பெரும்பான்மையான தமிழர்களின் ஆதரவை பெற்றிருப்பதானது, தமிழ் கட்சிகளுக்கு ஒருபுறம் அதிர்ச்சியையும் இன்னொருபுறம் தங்களின் இருப்பு தொடர்பான அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த அச்சம்தான் ஒன்பது கட்சிகளை ஓரிடத்தில் சந்திக்கும் நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதை இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும். ஏனெனில், இந்த ஒன்பது கட்சிகளில் தங்களை தமிழ்த் தேசிய தரப்பாக அடையாளப்படுத்திக் கொள்வதில் ஆர்வமுள்ளவர்களும் இருக்கின்றனர். அதேவேளை தங்களை யதார்த்தமானவர்களாக அடையாளப்படுத்திக் கொள்பவர்களும் இருக்கின்றனர்.

ஆனால், இந்தக் கூட்டுக்குள்ள பிரதான சவால் - உள்ளூராட்சித் தேர்தல் முடிவில் தங்களை ஒரு தவிர்க்க முடியாக தரப்பாக அடையாளப்படுத்துவதில் அவர்கள் வெற்றிபெற வேண்டும். பாராளுமன்றத் தேர்தலில் மோசமான பின்னடைவைச் சந்தித்தது போன்ற நிலைமையை உள்ளூராட்சித் தேர்தலிலும் எதிர்கொள்ளும் நிலைமை ஏற்பட்டால் அதன் பின்னர் குறித்த கட்சிகளை சேர்ந்தவர்கள் பலர் அரசியல் அரங்கில் சீவிப்பது கடினமாகிவிடும். ஏனெனில், உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள்தான் இந்தக் கட்சிகள் மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்வதற்கான சூழலை கனியச் செய்யும்.

# இரணைமடுக்குளத்தின் கீழ் 19,150 ஏக்கரில் சிறுபோகம்

கிளிநொச்சி, பெப். 25

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப்பெரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக் குளத்தின் கீழ், 19 ஆயிரத்து 150 ஏக்கர் நிலப்பரப்பில், சிறுபோக செய்கையும் அதற்கு மேலாக 382 ஏக்கரில், உப உணவு செய்கையும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இரணைமடுக்குளத்தின், 2025 ஆம் ஆண்டுக்கான சிறுபோக செய்கை கூட்டம் நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு, கிளிநொச்சி கனகாம்பிகையம்பாள் ஆலய முன்றலில் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில், கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியாளர் மற்றும் இரணைமடு நீர்ப்பாசன பொறியியலாளர், கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர், பிரதி மாகான விவசாய பணிப்பாளர், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாயிகள் பங்கேற்றனர்.

இதன் போது, சிறுபோக செய்கை மற்றும் உப உணவு செய்கை குறித்து தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. (அ)

# கடலில் நீராடிய பெண் மரணம்!

கொழும்பு, பெப். 25

கடலில் நீராடிக் கொண்டிருந்த ஜோர்தானைச் சேர்ந்த பெண் பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் காலி - பெந்தோட்டை பகுதியில் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கடலலையில் இழுத்துச் செல்லப்பட்ட பெண்ணை காப்பாற்றிய பிரதேசவாசிகள் அவரை பெந்தோட்டை மருத்துவமனையில் சேர்த்தனர். எனினும், குறித்த பெண் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

சுற்றுலாவுக்காக நாட்டுக்கு வருகை தந்திருந்த 25 வயதுடைய ஜோர்தானைச் சேர்ந்த பெண் பிரஜை ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார். (ஐ)

# மண்மேடு இடிந்து விழுந்து இளம் குடும்பஸ்தர் மரணம்

கொழும்பு, பெப். 25

பண்டாரவளை, பூனாகல பகுதியில் மண்மேடு இடிந்து விழுந்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் பதிவாகியுள்ளது.

அணை கட்டும் பணிக்காக குழி வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, மேலே இருந்த மண் குவியல் எதிர்பாராத விதமாக சரிந்து விழுந்ததில் குறித்த மரணம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் அதிகாலை நேரத்தில் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. மண்ணுக்குள் சிக்கிய இளைஞனை மீட்டு பண்டாரவளை மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது, அவர் அதற்குள் உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்.

உயிரிழந்தவர் பண்டாரவளை, துல்கொல்ல பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை ஆவார்.

இந்த சம்பவம் குறித்து பண்டாரவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# கோடாவுடன் இளைஞர் கைது

முல்லைத்தீவு, பெப். 25

முத்தையன்கட்டு இடதுகரை பேராற்று பகுதியில் கசிப்பு உற்பத்திக்கு தயாராக இருந்த 50ஆயிரத்து 600 மில்லிலீற்றர் கோடாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

முத்தையன்கட்டு இடதுகரை பேராற்று பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, விற்பனை இடம்பெறுவதாக ஒட்டிசுட்டான் பொலிஸ் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞன் 24வயதுடைய முத்தையன்கட்டு இடதுகரையை சேர்ந்தவர் என்பதும் முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட இளைஞன் நீதிமன்றில் முற்படுத்தப்பட பின்னர் பிணை வழங்கப்பட்டதாக ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# குறைக்கப்பட்ட விலைக்கு பாண் கிடைக்கவில்லை!


கொழும்பு, பெப். 25

பாண் இறாத்தல் ஒன்றின் விலை 10 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளபோதும் தமக்கு அந்த விலைக்குப் பாண் கிடைப்பதில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பாண் இறாத்தல் ஒன்றின் விலையை 10 ரூபாயால் குறைப்பதற்கு வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் அண்மையில் இணங்கியது.

சில வெதுப்பகங்களின் உரிமையாளர்கள் விலையைக் குறைக்க முன்வராததைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் இதற்கான வேலைத்திட்டத்தை தயாரிக்க வேண்டுமென அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். பணவரவு திருப்தி தரும். உறவினர்கள் மதிப்பார்கள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்துக் கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள்.

**மிதுனம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். கல்யாண பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கடகம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களின் வருகையால் வீட்டில் உற்சாகம் பொங்கும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**சிம்மம்**
நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். நட்பால் ஆதாயம் உண்டு.

**கன்னி**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள்.

**துலாம்**
சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. அதிகாரப்பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். தைரியம் கூடும் நாள்.

**விருட்சிகம்**
இதுவரை இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் நீங்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும். அரைகுறையாக இருந்த வேலைகள் முடியும்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டி வரும். யாரை நம்புவது என்கிற குழப்பத்திற்கு ஆளாவீர்கள்.

**மகரம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள்.உறவினர்களுடன் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். வாகனம் தொந்தரவு தரும். அரசு காரியங்கள் தாமதமாக முடியும்.

**கும்பம்**
பெற்றோருடன் மனம் விட்டுபேசுவீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். மதிப்புக் கூடும் நாள்.

**மீனம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் ஆதாயமுண்டு. சிலர் உங்களை நம்பி முக்கியபொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

# மோட்டார் சைக்கிளுடன் கார் நேருக்கு நேர் மோதி தீப்பற்றியது!

### வவுனியாவில் நேற்றுக்காலை பெரும் பரபரப்பு

வவுனியா, பெப்.25

வவுனியா, பூந்தோட்டம் வீதியில் சென்று கொண்டிருந்த கார் மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளான நிலையில் தீப்பற்றி முழுமையாக எரிந்த சம்பவம் ஒன்று நேற்றுக் காலை இடம்பெற்றது.

வவுனியா நகரப் பகுதியிலிருந்து பூந்தோட்டம் நோக்கிச் சென்ற காரும் பூந்தோட்டம் பகுதியிலிருந்து வவுனியா நகர் நோக்கி வந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இதனையடுத்து இரு வாகனங்களும் தீப்பற்றி எரிந்த நிலையில், மக்களால் தீயைக் கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அது பயனளிக்கவில்லை.



இந்த நிலையில், மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதோடு, காரில் வந்தவர்களும் காப்பாற்றப்பட்டனர்.

இதேவேளை, வவுனியா நகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் விரைந்து வந்து தீயைக் கட்டுப்படுத்த முயற்சித்த போதிலும் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் முழுமையாக எரிந்து நாசமாகின.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(எ-10)


# யாழிலிருந்து கடத்திய பெருமளவு கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது!

### கிளிநொச்சி பொலிஸார் அதிரடி நடவடிக்கை

கிளிநொச்சி, பெப்.25

யாழ்ப்பாணம் - வடமராட்சியிலிருந்து கடத்தப்பட்ட பெருமளவு கேரளக் கஞ்சா பொதிகள் கிளிநொச்சி, பரந்தனில் வைத்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதோடு, தருமபுரம் பகுதியைச் சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை வடமராட்சிப் பகுதியிலிருந்து கூலர் ரக வாகனத்தில் பெருமளவு கேரளக் கஞ்சா கடத்தப்படுவதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த வாகனம் ஏ - 9 வீதியில் பயணித்தபோது, பரந்தன் பகுதியில் இடை மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டது. அப்போது, 150 இற்கும்



மேற்பட்ட கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டன. இதனையடுத்து, சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

350 கிலோ கிராமுக்கு மேற்பட்ட நிறையுடைய கேரளக் கஞ்சா, கடத்தலுக்கு பயன்படுத்திய வாகனம் மற்றும் சந்தேக நபர் ஆகியோர் கிளிநொச்சி பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன.

(எ)

# மன்னார் கடற்பரப்பில் கைதான 32 இந்திய மீனவர்களும் மறியலில்

மன்னார், பெப்.25

மன்னார் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தி சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 32 இந்திய மீனவர்களையும் எதிர் வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிபதி நேற்று முன்தினம் இரவு உத்தரவிட்டார்.

தமிழ்நாடு,

இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 32 மீனவர்கள் அவர்களின் அதிநவீன தொலை தொடர்பு சாதனங்கள் மற்றும் 5 படகுகளுடன் இலங் கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 32 இந்திய மீனவர்களும் கடற்படையினரின் விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் மாலை மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிவானிடம் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது, 32 மீனவர்களையும் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

(எ)

# யாழ்ப்பாணத்தில் ஒருவர் திடீர் மரணம்!

யாழ்ப்பாணம், பெப்.25

யாழ்ப்பாணத்தில் திடீரென மயங்கி விழுந்த நபர் ஒருவர் உயிரிழந்தார்.

மட்டக்களப்பு - ஏறாவூர் பகுதியைச் சேர்ந்த முகமதுஹனீபா முகமதுசமீபா (வயது- 49) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் கடந்த ஒன்றரை வருடகாலமாக புத்தூர் பகுதியில் உள்ள விடுதியில் சமையல் வேலைகளில் ஈடுபட்டு வந்தார்.

இந்த நிலையில், கடந்த 22 ஆம் திகதி மாலை மூச்செடுக்க சிரமப்பட்ட இவர் திடீரென மயங்கி விழுந்தார்.

மயங்கி விழுந்தவர் உடனே உயிரிழந்தார்.

(எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் அதிகாரிகள் மீது முறைப்பாடுகள் அதிகரிப்பு

## மனித உரிமை ஆணைக்குழு கவலை

கொழும்பு, பெப். 25

**பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான முறைப்பாடுகள் அதிகரித்து வருகின்றமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கவலையை வெளியிட்டுள்ளது.**

பிரதானமாக சித்திரவதை, தன்னிச்சையான கைது, தடுப்புக்காவல், துன்புறுத்தல் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்காமை போன்ற குற்றச்சாட்டுகள் தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அந்த ஆணைக்குழு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அதன் அனைத்து ஆணையாளர்கள், சிரேஷ்ட அதிகாரிகள், பதில் பொலிஸ்மா அதிபர், சட்டம் மற்றும் பொலிஸ் மனித உரிமைகள் பிரிவின் பணிப்பாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, புதிய பொலிஸ் நிர்வாகத்தின் கீழ், திறன் மேம்பாடு, நிறுவன மறுசீரமைப்பு, புதிய நுட்பங்கள் மற்றும் பொறி முறை ஊடாக இந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தொடர்பிலும் அறிவிக்கப்பட்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை பொலிஸ்துறையின் விசேட விசாரணைப் பிரிவின் வகிபாகம், குறிப்பாக சித்திரவதை மற்றும் வலிந்து காணாமல் போகச் செய்தல் போன்ற செயற்பாடுகளுடன் தொடர்புடைய சட்ட அமுலாக்க அதிகாரிகளை விசாரிப்பதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வழக்குத் தொடருதல் மற்றும் தண்டனைகள் குறைவாக இருப்பது குறித்தும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கவலைகளை எழுப்பியுள்ளது. (அ)

# வெலிங்டனில் இலங்கையின் புதிய தூதரகம் திறந்துவைப்பு

கொழும்பு, பெப். 25

இலங்கை அரசாங்கம் நியூஸிலாந்து தலைநகர் வெலிங்டனில் புதிய தூதரகத்தை நிறுவியுள்ளது.

தூதரக சேவைகள் மார்ச் 03 ஆம் திகதி ஆரம்பமாகும். வெலிங்டனில் உள்ள இலங்கை தூதரகத்தின் அறிவிப்பின்படி, புதிய அலுவலகம் லெவல் 8, இலக்கம் 38, பெதெரிக் டவர், வாரிங் டெய்லர் வீதி, வெலிங்டன் சென்ட்ரல் என்ற இடத்தில் அமைந்துள்ளது.

தூதரக கருமபீடம், வாராந்தம் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9:30 மணி முதல் பிற்பகல் 1:30 மணி வரை, பொது விடுமுறை நாட்களைத் தவிர்த்து, பொதுமக்களுக்கு திறந்திருக்கும்.

சேவைகளில் கடவுச்சீட்டு செயலாக்கம், பிறப்பு பதிவுகள், இரட்டை குடியுரிமை விண்ணப்பங்கள், ஓய்வூதியம் தொடர்பான விடயங்கள், வழக்கறிஞரின் அதிகாரங்கள் மற்றும் உறுதிமொழிகள் ஆகியவை அடங்கும்.

மேலதிக் விசாரணைகளுக்கு, வெலிங்டனில் உள்ள தூதரகத்தை slhc.wellington@mfa.gov.lk என்ற மின்னஞ்சல் ஊடாகவோ அல்லது 021 081 43 469 என்ற தொலைபேசி இலக்கத்திலோ காலை 9:30 மணி முதல் மாலை 3:30 மணி வரை தொடர்பு கொள்ளலாம். (அ)

# மரண தண்டனை குறித்து அரசாங்கம் ஆராயவில்லை

## கூறுகிறார் நீதியமைச்சர்

கொழும்பு, பெப். 25

மரண தண்டனையை நிறைவேற்றுவது குறித்து அரசாங்கம் ஆராயவில்லை என நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மரண தண்டனை நிறைவேற்றம் குறித்து எந்த சூழ்நிலையிலும் அரசாங்கம் ஆராயவில்லை என அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அமைச்சராக உள்ள ஜனாதிபதி மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு தண்டனையை நிறைவேற்றுவது ஒரு வழிமுறையில்லை என்பது குறித்து தெளிவாக உள்ளார் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

நீதிமன்றக் கொலைகளின் பின்னர் இது குறித்து ஆராயவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய பிரச்னைக்கு தீர்வை காண்பதற்கு நாங்கள் உறுதியான நடவடிக்கைகளை எடுக்கின்றோம் என தெரிவித்துள்ள நீதியமைச்சர், மூலோபாயம் ஒன்றை வகுப்பதற்கான பேச்சுக்கள் இடம்பெறுகின்றன என கூறினார்.

நீதிமன்றம் தொடர்ந்தும் மரண தண்டனை தீர்ப்பினை வழங்குகின்றபோதிலும் இலங்கை 1976ஆம் ஆண்டு முதல் மரண தண்டனையை நிறைவேற்றுவதை இடைநிறுத்திவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஆண்டின் இதுவரையான காலத்தில்

# 4 இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை!

கொழும்பு, பெப். 25

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 428,197 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்குப் பிரவேசித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, ஜனவரி மாதத்தில் மாத்திரம் 252,761 பேர் நாட்டுக்குப் பிரவேசித்துள்ளனர்.

பெப்ரவரி மாதத்தில் இது வரையான காலப்பகுதியில் 175,436 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்குப் பிரவேசித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

பெப்ரவரி மாதத்தில் இந்தியாவிலிருந்தே அதிகளவிலான சுற்றுலாப்பயணிகள் வந்துள்ளனர்.

இதன்படி, இந்தியாவிலிருந்து 25,293 பேரும், ரஷ்யாவிலிருந்து 22,280 பேரும் பிரித்தானியாவிலிருந்து 18,785 பேரும், ஜேர்மனியிலிருந்து 12,393 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்குப் பிரவேசித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# வேகமாக பரவும் தீ

கொழும்பு, பெப். 25

சிவனொளிபாத மலை தொடர் வனப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட தீ ,வேகமாக பரவி வருவதாகவும், தீயைக் கட்டுப்படுத்த விமானப்படையின் உதவி கோரப்பட்டுள்ளதாகவும் ஹற்றன் வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நல்லதண்ணிய, வாலமலை தோட்ட பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மதியம் ஏற்பட்ட தீ, அப்பகுதியில் நிலவும் மிக வரண்ட காலநிலையுடன் மலை உச்சிகளில் வேகமாக பரவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வனப்பகுதிக்கு விசமிகளினால் தீ வைக்கப்பட்டிருக்கலாம் என நல்லதண்ணிய பொலிஸார் சந்தேகிக்கின்றதுடன் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் வனப்பகுதிகளுக்கு தீ வைக்கும் நபர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தை தொடர்பு கொள்ளுமாறு வனத்துறையினர் கேட்டுள்ளனர். (அ)

# தனியார் பல் சிகிச்சை நிலையத்தில் பல்லை பிடுங்கிய ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 25

பலாங்கொடையில் உள்ள தனியார் பல் சிகிச்சை நிலையம் ஒன்றில் பல் ஒன்றை அகற்றிய பின்னர் ஏற்பட்ட நோய் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பலாங்கொடை, படுலத்த பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல் அகற்றப்பட்ட பிறகு ஏற்பட்ட நோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் இறந்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

பல் அகற்றப்படுவதற்கு முன்னர் அவருக்கு எந்த நோயும் இருக்கவில்லை என்று உயிரிழந்த நபரின் மனைவி தெரிவித்துள்ளார்.

# போலி தரநிலைச் சின்னம் பாவித்து குடிதண்ணீர் போத்தல் விநியோகம்

## நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, பெப். 25

இலங்கை தரநிலை சின்னத்தை போலியாக தயாரித்து சந்தைக்கு பொருட்களை விநியோகித்த குற்றச்சாட்டில் தனியார் நிறுவனம் ஒன்றின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

குடிதண்ணீர் போத்தல்களை தயாரிக்கும் நிறுவனமொன்றுக்கு எதிராகவே இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் மற்றும் தலைவருக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் அபராதம் விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், போலியான தரநிலை சின்னத்துடன் சந்தைக்கு விநியோகிக்கப்படவிருந்த ஒரு மில்லியன் ரூபாய்க்கும் அதிக பெறுமதியான 6 800 இற்கும் அதிகமான குடிதண்ணீர் போத்தல்கள் அழிக்கப்படவுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது. (அ)

# ஊவா வெல்லஸ்ஸ பல்கலையில் இரு மாணவக் குழுக்கள் மோதல்!

## மூன்று மாணவர் வைத்தியசாலையில்

கொழும்பு, பெப். 25

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் இரு மாணவக் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் மூன்று மாணவர்கள் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மாணவர்கள் மூவரும் பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் கல்வி கற்கும் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட மாண குழுக்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

மோதலை தடுக்க முயன்ற தொழில்நுட்ப பீடத்தின் இறுதியாண்டு மாணவர்களே இவ்வாறு காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் முகத்தில் பலத்த காயங்கள் காணப்படுவதாக வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (அ)

நால்வரை காவுகொண்ட விபத்து

# சாரதிகளின் அனுமதிப் பத்திரங்கள் மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தம்

கொழும்பு, பெப். 25

குருநாகல் - தோரயாய பகுதியில் அண்மையில் இடம்பெற்ற பஸ் விபத்து தொடர்பில் கைதான இரண்டு சாரதிகளினதும், சாரதி அனுமதிப்பத்திரங்களை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.


குருநாகல் மாவட்ட நீதவான் நுவான் கௌசல்ய மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

அத்துடன், குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சந்தேகநபர்களை தலா இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் விடுவிக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

தோரயாய பகுதியில் கடந்த 10 ஆம் திகதி, நிறுத்தி வைக்கப் பட்டிருந்த பஸ் ஒன்றின் மீது மற்றுமொரு பஸ் மோதியதில் இடம்பெற்ற விபத்தில் நால்வர் உயிரிழந்ததுடன், 28 பேர் காயமடைந்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முச்சக்கரவண்டி புரண்டதில் இளைஞர் உடல் நசுங்கி பலி!



கொழும்பு, பெப். 25

மாத்தறை திக்வெல்ல பகுதியில் முச்சக்கர வண்டி புரண்டதால், இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ரதம்பல வீதியைச் சேர்ந்த 31 வயதுடைய ஹேவா கலுகபுகே ஹசன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

விபத்து, கடந்த 22ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில் ரதம்பல வீதியில், வலஸ்கலை அருகே இடம்பெற்றுள்ளது.

முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், முச்சக்கரவண்டி வீதியின் ஓரத்தில் உள்ள சுவருடன் மோதியதைத் தொடர்ந்து புரண்டுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. இதில் வாகனத்துக்குக் கீழ் சிக்கிய இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அந்நேரம் அருகில் சென்ற மற்றொரு முச்சக்கர வண்டியின் சாரதி தகவல் வழங்கியதையடுத்து, வலஸ்கலை காவல் துறையினர் சம்பவ இடத்திற்குச் சென்று, சிக்கிய இளைஞரை அவசர வைத்தியசாலைக்கு அனுப்பியுள்ளனர்.

அவர் வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோதிலும், இளைஞர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக வைத்தியர்கள் உறுதிப்படுத்தினர்.

பிரேத பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில், வாகனத்தில் உடல் நசுங்கியதால் ஏற்பட்ட சுவாசக்குறைவு காரணமாக மரணம் ஏற்பட்டது தெரியவந்துள்ளது. (அ)

# ஜனநாயக வழியிலேயே எமது அரசியல் பயணம் தொடரும்!

## கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, பெப். 25

**“வீடுகளைக் கொளுத்தி அறகலயமூலம் ஆட்சியைப் பிடிக்கும் எண்ணம் எம்மிடம் இல்லை. ஜனநாயக வழியிலேயே எமது அரசியல் பயணம் தொடரும்.” என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-எம்மிடம் ஆயுதப் படை இல்லை. வீடுகளை கொளுத்தி, பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொன்று, அறகலய மூலம் ஆட்சியை பிடிக்கமாட்டோம். ஜனநாயக வழியில் எமது பயணம் தொடரும்.



ஆளுங்கட்சியிலுள்ள 159 பாராளுமன்ற உறுப்பினர்களால் பலனில்லை என ஜனாதிபதி கருதினால் இரண்டரை வருடங்களுக்கு பிறகு, பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கு செல்ல முடியும்.

எம்மிடம் வேலைத்திட்டம் உள்ளது, தூரநோக்கு சிந்தனை உள்ளது. கடந்த காலங்களில் செயல்பட்ட அனுபவம் உள்ளது. எனவே, ஜனநாயக வழியில் எந்நேரத்திலும் ஆட்சியை பொறுப்பேற்க தயார்.

எந்த கட்சியாக இருந்தாலும் இளைஞர்களை பொறுப்புடன் வழிநடத்தவேண்டும். புதிய இலங்கையை கட்யெழுப்பும் வகையில் நாம் இளைஞர்களை வழிநடத்துவோம்-என்றார். (அ)

# இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

கொழும்பு, பெப். 25

கடந்த வெள்ளிக்கிழமையுன் ஒப்பிடுகையில், நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 291 ரூபாய் 51 சதம், விற்பனைப் பெறுமதி 300 ரூபாய் 8 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 368 ரூபாய் 17 சதம், விற்பனைப் பெறுமதி 382 ரூபா 9 சதம். யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 304 ரூபாய் 86 சதம், விற்பனைப் பெறுமதி 317 ரூபாய் 35 சதம். சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 322 ரூபாய் 50 சதம், விற்பனைப் பெறுமதி 337 ரூபாய் 70 சதம். கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 204 ரூபா 5 சதம், விற்பனைப் பெறு மதி 212 ரூபாய் 77 சதம். அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 184 ரூபாய் 23 சதம், விற்பனைப் பெறுமதி 193 ரூபாய் 63 சதம்.

சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 216 ரூபாய் 98 சதம், விற்பனைப் பெறுமதி 226 ரூபாய் 88 சதம்.

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 1 ரூபாய் 94 சதம், விற்பனைப் பெறுமதி 2 ரூபாய் 1 சதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# காவலில் இருந்த சந்தேகநபர்கள் கொலை சட்டத்தின் ஆட்சிக்கு பெரும் அச்சுறுத்தல்!

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, பெப். 25

அண்மைய நாட்களில் பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளின் காவலில் இருந்த சந்தேக நபர்கள் கொல்லப்பட்ட சம்பவங்களால் சட்டத்தின் ஆட்சிக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அறிக்கையொன்றை வெளியிட்டு அந்த சங்கம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அண்மையில் கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்குள் சிறைச்சாலை அதிகாரிகளின் காவலில் இருந்தபோது சந்தேக நபர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், கடந்த 21 ஆம் திகதி இரண்டு சந்தேகநபர்கள் காவலில் இருந்தபோது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தனர்.

இவ்வாறான சம்பவங்களால் சட்ட அமைப்புகள் மீதான பொதுமக்களின் நம்பிக்கை சிதைவடையும் என்பதால் அவற்றைத் தடுப்பதற்கு காவல்துறை மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் மிகுந்த பொறுப்புடன் செயற்பட வேண்டும் என சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (அ)

# கசிப்பு விற்பனை செய்த கடற்படை அதிகாரி கைது!

கொழும்பு, பெப். 25

பதுளை மாவட்டம் ஊவா பரணகம - கெடகொட பிரதேசத்தில் உள்ள தனது வீட்டில் பாரியளவிலான கசிப்பை விற்பனைக்காக வைத்திருந்த கடற்படை அதிகாரி ஒருவர் அம்பகஸ்தோவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த கடற்படை அதிகாரி, விடுமுறையில் சென்று நீண்ட நாட்களாக இத்தொழிலை மேற்கொண்டு வந்துள்ளதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட கடற்படை அதிகாரியின் வீட்டில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, சுமார் 18,000 கிராம் கோடா மற்றும் கசிப்பு தயாரிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட பல உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, மற்றுமொரு சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது தப்பிச் சென்ற நபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அம்பகஸ்தோவ பொலிஸார் தெரிவித் தனர்.

# அதிக விலையில் கீரிச் சம்பா சோதனை நடவடிக்கை தீவிரம்

கொழும்பு, பெப். 25

கீரிச் சம்பா அரிசியை சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்யும் மோசடி தொடர்பில் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கீரிச் சம்பா அரிசியினை அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களைக் கண்டுபிடிப்பதற்கான சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் இதுவரையில் அதிக விலைக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்களை விற்பனை செய்தமை தொடர்பில் 3,177 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த சோதனை நடவடிக்கைகளின் போது 46 மில்லியன் ரூபாய் அபராதமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

இதில் அதிக விலையில் அரிசியை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் 24 மில்லியன் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களைக் கண்டறிவதற்காக நேற்று முன் தினம் கேகாலை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 39 விற்பனையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# அதிகரித்துவரும் துப்பாக்கிச்சூடுகளால் சுற்றுலாத்துறை வீழ்ச்சியுறும் அபாயம்!

## சுற்றுலா கைத்தொழிற்துறை கூட்டமைப்பு

கொழும்பு, பெப். 25

நாட்டில் அதிகரித்து வரும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் காரணமான சுற்றுலாத்துறை மீண்டும் வீழ்ச்சியடையும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சிறு மற்றும் நடுத்தர சுற்றுலா கைத்தொழிற்துறையினரின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அதிகாரிகள் இதில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர அளவிலான சுற்றுலா தொழில் முனைவோர் சங்கத்தின் தலைவர் சமிர சேனக டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாளாந்தம் பல பகுதிகளில் தற்போது துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

இது சுற்றுலாத்துறைக்கு நேரடியாக பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும்.

இந்த சம்பவங்களால் வீதியில் சுதந்திரமாக செல்வதற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

எனவே, சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சியை ஏற்படுத்துவதில் இது நேரடியாக தாக்கம் செலுத்தக்கூடும்.

நாட்டுக்கு வரும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும். இவ்வாறு தொடர்ச்சியான துப்பாக்கிச் சூடு காரணமாக குற்ற வலையமைப்பு ஒழுக்கப்படவில்லையாயின் நாட்டின் சுற்றுலாத்துறை பாரிய நெருக்கடிக்கு உள்ளாகக்கூடும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாதுகாப்பு குறித்து அரசுக்கு மேலதிக வகுப்பு!

## நடத்த தயார் என்கிறார் சாகர காரியவசம்

கொழும்பு, பெப். 25

**குறுகிய அரசியல் நோக்கத்துக்காக தேசிய பாதுகாப்பை அரசாங்கம் அலட்சியப்படுத்தக்கூடாது. தேசிய பாதுகாப்பு தொடர்பில் மேலதிக வகுப்பு நடத்த தயார் என்று குறிப்பிட்ட தேசிய மக்கள் சக்திக்கு தேசிய பாதுகாப்பு தொடர்பில் மேலதிக வகுப்பை நடத்த வேண்டியுள்ளது என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

கொழும்பில் மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால் பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன. பொது இடங்களில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் சாதாரணமாக இடம்பெறுகின்றன. பொதுமக்களின் பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தல் காணப்படுகிறது.



குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்துவதை அல்லது அலட்சியப் படுத்துவதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ளவேண்டும். நல்லாட்சி அரசாங்கம் அரசியல் பிரபல்யத்துக்காக தேசிய பாதுகாப்பை பலவீனப் படுத்தியது.அதன் விளைவு உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலாக மாறியது. ஆகவே தேசிய பாதுகாப்பை பலவீனப் படுத்தக் கூடாது.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் தேசிய பாதுகாப்புக்கு எந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதை விளங்கிக்கொள்ள முடியவில்லை.தேசிய பாதுகாப்பு தொடர்பில் மேலதிக வகுப்பு நடத்த தயார் என்று குறிப்பிட்ட தரப்பினருக்கு தேசிய பாதுகாப்பு என்றால் என்ன, அதன் அம்சங்கள் என்னவென்பது குறித்து மேலதிக வகுப்பு நடத்த வேண்டியுள்ளது.

அரசியல் பிரபல்யத்துக்காகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு குறைக்கப்பட்டு, இராணுவ பாதுகாப்பு முற்றாக நீக்கப்பட்டது. இந்த விவகாரம் நீதிமன்றத்தில் சவாலுக்குபடுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றம் சிறந்த தீர்வினை வழங்கும்-என்றார். (அ)

# தொழில்துறைப் பிரச்சனையை தீர்க்க அரசாங்கம் புதிய திட்டம்!

கொழும்பு, பெப். 25

தொழில்துறை தொடர்பான பிரச்சனைகளைத் தீர்க்க எதிர்காலத்தில் புதிய டிஜிற்றல் வசதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்தார்.

இரத்தினபுரி பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி இதனை கூறினார்.

இதன்போது தொழில் வழங்குநர்கள் தங்கள் சொந்த மாவட்டத்துக்குள் இருக்கும் எந்தவொரு பிரச்னையையும் தீர்த்துக்கொள்ள முடியுமெனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-தொழிற்சாலைகள் கிராமங்களில் இருக்கமானால், தொழில்துறை அமைச்சு மக்களுக்கு சேவைகளை வழங்கும் இடமாக இருந்தால், அந்த சேவைகள் சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் வழங்கப்படவேண்டும்.

பின்னர் தொழில் வழங்குநர்கள் கொழும்புக்கு வந்து அதற்காகப் போராட வேண்டியதில்லை. எங்கள் எதிர்கால திட்டம் நவீனமயமாக்கப்பட்டு தொழில்நுட்பத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டவுடன், தொழிற்சாலையிலேயே பிரச்னைகளை தீர்க்க முடியும்.

ஒருவர் தொழில் தொடங்க அனுமதி பெற ஒன்றரை வருடம் மட்டுமே ஆகும். இல்லையெனில், இலஞ்சம் செலுத்த வேண்டிய சூழல் உருவாகின்றது. இலஞ்சம் வழங்காமல் இருப்பதற்காகவே அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனவே இலஞ் சம் வழங்காமல் ஊழலற்ற முறையில் செயற்பட வேண்டியது அவசியம். இதை மேலும் மேம்படுத்த, அனைத்து அரச கொடுப்பனவுகளையும் டிஜிட்டல் மயமாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே உங்கள் வேலையை எளிதாக்குவதற்காக தொழில்முனைவோரிடம் நாங்கள் கேட்டுக்கொள்வது, வேலையை இலகுபடுத்த இலஞ்சம் கொடுக்க வேண்டாம்-என்றார். (அ)

# கொட்டாஞ்சேனையில் சூடு சந்தேக நபர் ஒருவர் கைது!

கொழும்பு, பெப். 25

கொழும்பு, கொட்டாஞ்சேனை பகுதியில் நபர் கொலை செய்யப்பட்டமைக்கு உதவிய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி கொட்டாஞ்சேனை பகுதியில் நபர் ஒருவரை சுட்டுக் கொன்ற குற்றம் தொடர்பில் கொழும்பு வடக்குப் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இதன்படி, விசாரணை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், குற்றச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் பிற்பகல் முகத்துவாரம், மெட்சந்த செவன பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 28 வயதான முகத்துவாரம் பகுதியைச் சேர்ந்தவராவார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில், அவர் வெளிநாடு ஒன்றில் தலைமறைவாகியுள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி மற்றும் போதைப்பொருள் வியாபாரியுடன் நெருங்கிய தொடர்பில் இருந்து, இந் நாட்டில் குற்றச் செயல்களை மேற்கொண்டுவரும் நபர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பு கோட்டைப் பகுதியில் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்தியவரை கொஸ்கசந்தியா பகுதியில் உள்ள அவரது மனைவி வீட்டுக்கு முச்சக்கர வண்டியில் அழைத்துச் சென்ற சந்தேக நபர், குறித்த துப்பாக்கி, ரவைகளை அவருக்கு வழங்கியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

கடந்த 10 ஆம் திகதி கொட்டாஞ்சேனை பகுதியில் நபர் ஒருவரை சுட்டுக் கொன்ற குற்றத்துக்கு துப்பாக்கியை வழங்கியவர் இந்த சந்தேக நபர் என தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# நாடு முழுவதிலும் செவ்வந்திக்கு வலை!

கொழும்பு, பெப். 25

கணேமுல்ல சஞ்சீவ கொலையில், சட்டத்தரணி வேடமணிந்து நீதிமன்றத்துக்கு துப்பாக்கியை கொண்டு வந்த 25 வயதுடைய இஷாரா செவ்வந்தி என்ற பெண்ணை தேடுவதற்காக நாடளாவிய ரீதியில் விசேட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெண் வெளிநாட்டுக்குச் செல்லவில்லை என்றும், நாட்டினுள்ளேயே தலைமறைவாகியுள்ளதாகவும் கிடைத்த தகவலின் அடிப்படையில், தெஹிவளை மற்றும் மத்துகம பகுதிகளில் பல இடங்களில் நேற்று விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இருப்பினும், இந்தப் பெண் குறித்து எந்த தகவலும் கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# உயரும் வெப்பநிலை!

கொழும்பு, பெப். 25

நாட்டின் பல மாவட்டங்களில் காணப்படும் அதிக வெப்பநிலை குறித்து பொது மக்கள் அவதானம் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்தி, வடமேல், மேற்கு, சபரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் நிலவும் வெப்பம் மனித உடலுக்கு உணரப்படும் வெப்பநிலை தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால், போதிய நீர் ஆகாரங்களை அருந்துமாறும் ஓய்வு எடுக்கும்போது நிழலான இடங்களில் இருக்குமாறும் திணைக்களம் தமது அறிவித்தலில் தெரிவித்துள்ளது.

அவ்வாறே வயோதிபர்கள் மற்றும் நோய்களால் பாதிக்கப்பட்ட நபர்கள் இது தொடர்பாக விசேட கவனத்து டன் செயற்படுமாறும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வெள்ளை அல்லது இள நிறங்களில் மற்றும் இலகுவான ஆடைகளை அணிந்து கொள்ளுமாறும் கனரக வேலைகளில் ஈடுபடுவதில் இருந்து முடிந்தவரை கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளுமாறும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# பொலிஸாரின் உத்தரவுகளை மீறி பயணித்த கார் மீது துப்பாக்கி சூடு!

கொழும்பு, பெப். 25

காரொன்றை நிறுத்துமாறு வழங்கப்பட்ட உத்தரவுகளை மீறி பயணித்த வாகனம் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது 02 கிலோ கிராமுக்கும் அதிகமான கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

மாலபே, ஹோகந்தர பகுதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற இச் சம்பவத்தின்போது தம்பதியொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாலபே பகுதியில் நடத்தப்பட்ட சோதனையின் போது, குறித்த வாகனத்தை நிறுத்துமாறு பொலிஸார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

ஆனால், வாகனத்தின் சாரதி உத்தரவுகளை கவனிக்கத் தவறி அதற்குப் பதிலாக வேமாக பயணித்தமையினால் பொலிஸார் காரின் ரயர்களில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து, வாகனம் வீதியோரத்தில் உள்ள கம்பத்தில் மோதி நின்றது.

பொலிஸார் வாகனத்தைச் சோதனையிட்டதில் 01.8 கிலோ கஞ்சா சாரதியின் இருக்கைக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின்போது சந்தேக நபரின் வீட்டில் இருந்து மேலும் ஒரு கிலோ கஞ்சாவை அதிகாரிகள் மீட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கம்பஹா மாவட்டம் தெல்கொட பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய ஆண் மற்றும் 33 வயதுடைய பெண்ணாவர். (அ)

# தேசபந்து தென்னக்கோனுக்கு எதிரான மனுக்களின் விசாரணை திகதி நிர்ணயம்

கொழும்பு, பெப். 25

மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராகப் பணியாற்றிய தேசபந்து தென்னக்கோன், பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்ட விதம் அரசியலமைப்புக்கு முரணானது என்று தீர்ப்பளிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட ஒன்பது அடிப்படை உரிமை மனுக்களின் விசாரணைக்கான திகதியை உயர் நீதிமன்றம் நிர்ணயித்துள்ளது.

குறித்த மனுக்கள் நேற்று பிரீதி, பத்மன் சூரசேன, யசந்த கோதாகொட, ஏ.எச்.எம்.டீ.நவாஸ் ஷிரான் குணரத்ன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய ஐவரடங்கிய நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

பிரதிவாதி தேசபந்து தென்னக்கோன் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா, நீதிமன்றத்தின் முன் சாட்சியங்களை முன்வைத்து, தனது கட்சிக்காரர் பொலிஸ்மா அதிபராக தனது கடமைகளைச் செய்வதைத் தடுக்கும் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.


எனவே, இந்த மனுவை விரைவாக விசாரணை மேற்கொள்வதற்கான திகதியை வழங்குமாறு நீதிமன்றத்தை கோரினார்.முன்வைக்கப்பட்ட விடயதானங்களை கருத்தில் கொண்டு, ஐந்து நீதிபதிகள் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு, தொடர்புடைய மனுக்களை மே 6ஆம், 7 ஆம் மற்றும் 8ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானித்தது.

கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, இளம் பத்திரிகையாளர்கள் சங்கம் மற்றும் பிற கட்சிகளால் மேற்படி ஒன்பது அடிப்படை உரிமை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்று மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூஜாபூமி என்ற பெயரில் காணிகள் ஆக்கிரமிப்பு!

**விடுவிக்குமாறு விவசாயிகள் கோரிக்கை**



**திருகோணமலை, பெப்.25**
**திருகோணமலை, புல்மோட்டை - சாத்தனமடு பகுதியில் பிக்கு ஒருவரால் கையகப்படுத்தப்பட்டுள்ள விவசாய காணிகளை விடுவிக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

புல்மோட்டை கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட புல்மோட்டை சாத்தனமடு குளப்பகுதியின்கீழ் விவசாயத்தில் ஈடுபட்டு வந்த விவசாயிகளின் காணியில் பிக்கு ஒருவர் புத்தர் சிலையை வைத்து அதனைச் சுற்றியுள்ள விவசாய காணிகளை ஆக்கிரமித்துள்ளார்.

இதனால், பல வருட காலமாக விவசாயம் மேற்கொண்டுவந்த விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதித்துள்ளதாக தெரிவித்தனர்.

10 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளில் விவசாயம் மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும், கிட்டத்தட்ட அதனை சுற்றியுள்ள 100 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை பிக்கு கையகப்படுத்தியுள்ளதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்று காலப்பகுதியில் மக்கள் நடமாட்டம் இல்லாத போது, குறித்த பகுதியில் புத்தர் சிலை வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் தற்போது இருக்கின்ற பெரும் புத்தர்சிலை வைக்கப்பட்டது.

சிங்களவர்கள் இல்லாத இடத்தில் வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலையை பராமரிக்க எவரும் இல்லை. இதை நாங்கள்தான் பராமரித்து வருகின்றோம்.

புல்மோட்டையில் பூஜா பூமி என்ற பெயரில் காணிகளை கையகப்படுத்தி புத்தர் சிலைகளை வைத்து நிலங்களை ஆக்கிரமிப்பதோடு இனங்களுக்கிடையிலான முறுகல் நிலையையும் குறித்த பிக்கு மேற்கொண்டு வருகின்றார்.

எனவே, அநுர அரசாங்கம் இவ்வாறான விடயங்களை கவனத்தில் கொண்டு பூஜாபூமி என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களுடைய காணிகளை விடுவித்து மக்கள் விவசாயத்தில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# வாளுடன் ஒருவர் கைது

சம்மாந்துறை, பெப்.25
வாள் ஒன்றை உடைமையில் மறைத்து வைத்திருந்த நபரை கைது செய்து சம்மாந்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 09.00 மணியளவில் அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர்ப் பகுதியில் வைத்து சம்மாந்துறை பெருங்குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் இவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 2 அரை அடி நீளமான வாள் ஒன்றும் சந்தேக நபர் வசமிருந்து மீட்கப்பட்டுள்ளது. மேலும், சந்தேக நபரை சான்றுப் பொருளுடன் சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ-01)

# தேசிய நிர்மாண சங்க விருது வழங்கும் நிகழ்வு



கல்முனை, பெப்.25
இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தின் 28 ஆவது வருடாந்த விருது வழங்கும் நிகழ்வு கடந்த 21 ஆம் திகதி அம்பாறை நகரில் நடைபெற்றது.

தேசிய நிர்மாண சங்கத்தின் கல்முனை கிளையின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எம். பி. எம். ஹசீர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கட்டட மற்றும் நிர்மாணத் துறையில் நேர்த்தியாகவும், சிறந்த முறையிலும் பணிகளை முன்னெடுக்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (எ)

# சமுர்த்தி சமுதாய தலைவர்கள் சாய்ந்தமருதில் கௌரவிப்பு

சாய்ந்தமருது, பெப்.25
சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் மற்றும் சமுர்த்தி சமுதாய தலைவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் கடந்த 21 ஆம் திகதி சாய்ந்தமருது வொலிவேரியன் கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

சாய்ந்தமருது சமுர்த்தி வங்கி சங்கத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் நியாத் ஏ, மஜீத் தலைமையில் நடைபெற்ற



இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (எ-06)



அன்பின் பாதை எண்ணம்போல் வாழ்க்கை கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் மகுடம் வி. மைக்கல் கொலினின் “அன்பின் முத்தங்கள்” கவிதை நூல் அறிமுக விழா நேற்று முன்தினம் திருகோணமலை சிறீ பத்திர காளியம்பாள் தேவஸ்தான மண்டபத்தில் நடைபெற்றது.

# உணவகங்களின் தரத்தை மேம்படுத்த விசேட கவனம்

கல்முனை, பெப்.25
கல்முனை பிராந்திய உணவு பாதுகாப்பு மற்றும் உணவகங்களின் தரத்தை மேம்படுத்துதல் தொடர்பான விசேட மீளாய்வு கூட்டம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் நடைபெற்றது.

பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட குறித்த கூட்டம் கடந்த 22ஆம் திகதி நடைபெற்றது.

இதில், பிராந்திய சுற்றுச்சூழல், தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எஸ்.எம்.பௌஸாத், கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சீ.எம்.மாஹிர், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிராந்திய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஐ.எல்.லபீர், உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர் எஸ்.ஜீவராஜா மற்றும் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, உணவு பாதுகாப்பு மற்றும் உணவகங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக



சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் குறித்தும் சுகாதார வைத்திய அதிகாரிகளால் விளக்கக்காட்சிகளுடன் விளக்கவுரைகளும் நிகழ்த்தப்பட்டன.

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கல்முனை வடக்கு, கல்முனை தெற்கு, சாய்ந்தமருது ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிறுவனங்களை பதிவு செய்கின்ற போது சுகாதார ரீதியாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் குறித்தும் கல்முனை மாநகர சபை ஆணையாளருடன் கலந்துரையாடுவது என இக்கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டது. (எ-06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்த பேச்சுக்களை இரத்துச் செய்தது ஹமாஸ்!

## காஸாவில் மீண்டும் போர் அச்சம்

காஸா, பெப்.25

**இஸ்ரேலுடனான போர் நிறுத்த பேச்சுக்களை ஹமாஸ் அமைப்பு இரத்துச் செய்துள்ளது. இதனால், காஸா பகுதியில் மீண்டும் போர் ஏற்படும் அச்ச நிலை உருவாகியுள்ளது.**

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே தற்காலிக போர் நிறுத்தம் அமுலில் உள்ளது. இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தப்படி ஹமாஸ் அமைப்பு, இஸ்ரேலியப் பணயக் கைதிகளை விடுதலை செய்து வருகிறது. இதற்கு ஈடாக இஸ்ரேல் தங்கள் நாட்டு சிறைகளில் உள்ள பலஸ்தீனிய கைதிகளை விடுதலை செய்து வருகிறது.

இதேவேளை, பணயக் கைதிகளில் கொல்லப்பட்ட 4 இஸ்ரேலியர்களின் உடல்களை கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஹமாஸ் ஒப்படைத்தது. காஸாவின் முக்கிய நகரில் மேடை அமைக்கப்பட்டு பின்னர் செஞ்சிலுவை சங்கம் மூலம் இஸ்ரேலிடம் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டன. இஸ்ரேலியர்களின் உடல்களை அவமதிக்கும் வகையில் காஸாவில் அணிவகுப்பு நடத்தி ஒப்படைத்ததாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டியது. இது போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல் என்றும் இஸ்ரேல் தெரிவித்தது.

இதையடுத்து, கடந்த 22ஆம் திகதி பணயக் கைதிகளில் மேலும் 6 பேரை ஹமாஸ் விடுதலை செய்தது. இந்த நடவடிக்கையின்போதும் காஸாவில் மேடை அமைக்கப்பட்டு அணிவகுப்பு நடத்தப்பட்டு பணயக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். இந்த நடவடிக்கையின்போது மேலும் 2 பணயக் கைதிகளை ஹமாஸ் அமைப்பு காரில் அழைத்து வந்துள்ளது. அந்தப் பணயக் கைதிகள் தங்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி மன்றாடுவது போன்ற வீடியோவையும் ஹமாஸ் வெளியிட்டது.

இந்த நடவடிக்கைகளால் ஆத்திரமடைந்த இஸ்ரேல், போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஹமாஸ் மீறிவிட்டதாக மீண்டும் குற்றஞ்சாட்டியது. மேலும், 6 பணயக் கைதிகளுக்கு ஈடாக இஸ்ரேலிய சிறைகளில் உள்ள பலஸ்தீனியர்களில் 620 பேரை விடுதலை செய்ய மேற்கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தத்தையும் தற்காலிகமாக நிறுத்தியது. பலஸ்தீனிய கைதிகள் 620 பேரையும் இஸ்ரேல் விடுதலை செய்யவில்லை.

இந்த நிலையில், பலஸ்தீனிய கைதிகளை விடுதலை செய்யாத நிலையில் இஸ்ரேல் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிவிட்டதாக ஹமாஸ் பதிலுக்கு குற்றஞ்சாட்டியுள்ளது.

பலஸ்தீனிய கைதி களை விடுதலை செய்யாதவரை இஸ்ரேலுடன் போர் நிறுத்த பேச்சுக்களில் ஈடுபடப்போவதில்லை என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது.

போர் நிறுத்த பேச்சுக்களை ஹமாஸ் இரத்துச் செய்துள்ள நிலையில் படை யினரை தயார் நிலையில் இருக் கும்படி இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு உத்தர விட்டுள்ளார்.

இதனால், காஸா முனையில் ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் மீண்டும் போரை தொடங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# பாப்பரசர் பிரான்சிஸ் இன்னும் ஆபத்தான நிலையில் உள்ளார்!

வாடிகன் சிற்றி, பெப்.25

பாப்பரசர் பிரான்சிஸ் உடல் நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக இருப்பதாகவும், இரத்த பரிசோதனைகளில் சிறுநீரக செயலிழப்புக்கான அறிகுறிகள் தற்போது கட்டுப்பாட்டில் உள்ளது என்றும் வாடிகன் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான பாப்பரசர் பிரான்சிஸ் அண்மைக்காலமாகவே வயோதிகம் சார்ந்த உடல்நலப் பிரச்னைகளால் அவதியுற்று வருகிறார். சிறுவயதிலேயே நுரையீரலின் ஒரு பகுதி அகற்றப்பட்ட நிலையில், நாள்பட்ட நுரையீரல் நோயால் பாப்பரசர் பிரான்சிஸ் பாதிக்கப்பட்டுள்ளார். இதன் காரணமாக குளிர்காலத்தில் அவருக்கு மூச்சுக்குழாய் அழற்சி ஏற்படுவது வழக்கம்.

இந்த நிலையில் மூச்சுக்குழாய் அழற்சி மோசமடைந்ததை அடுத்து கடந்த 14ஆம் திகதி ரோம் நகரில் உள்ள ஜெமெல்லி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில் பாப்பரசர் பிரான்சிஸ் உடல்நிலை குறித்த புதுப்பிப்பை நேற்றுக்காலை வாடிகன் நிர்வாகம் பகிர்ந்துள்ளது. அதில், "பரிசுத்த தந்தையின் நிலை தொடர்ந்து மோசமாக உள்ளது. எனவே, நேற்று முன்தினம்(நேற்று) விளக்கப்பட்டது போன்று, ஆபத்திலிருந்து அவர் இன்னும் மீளவில்லை.

நேற்றுக் காலை (இன்று), பாப்பரசர் பிரான்சிஸ் ஆஸ்துமா போன்ற நீடித்த தீவிர சுவாச நெருக்கடியை அனுபவித்தார், இதற்கு அதிக ஓட்ட ஒக்சிஜன் நிர்வகிக்க வேண்டியிருந்தது"என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஆப்கானில் பெண்கள் நடத்தும் வானொலிக்கு மீண்டும் அனுமதி

காபூல், பெப்.25

ஆப்கானிஸ்தானில் தடை செய்யப்பட்ட பெண்கள் வானொலிக்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றினர். அதன்பிறகு அங்கு பெண்கள், சிறுமிகள் மீது ஏராளமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன. இதனைத் தொடர்ந்து ரேடியோ பேகம் என்ற பெண்கள் வானொலி நிலையத்துக்கும் தடை விதிக்கப்பட்டது. இது முழுக்க முழுக்க ஆப்கானிய பெண்களால் இயங்கும் ஒரு வானொலியாகும். இதன்மூலம் அந்த நாட்டின் பாடசாலை கல்விப் பாடத்திட்டங்கள் நடத்தப்பட்டு வந்தன.

எனவே, அந்த வானொலியை மீண்டும் இயக்க அனுமதிக்கக் கோரி தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்பட்டது. இந்த நிலையில், பெண்கள் வானொலிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நேற்று முன்தினம் தலிபான்கள் நீக்கியுள்ளனர். (எ)

# இந்து மதத்தை கேலி செய்து மக்களை பிளவுபடுத்த முயற்சி

## இந்திய பிரதமர் மோடி சாடல்



சத்தர்பூர், பெப்.25

"இப்போதெல்லாம் சில தலைவர்கள், இந்த மதத்தை கேலி செய்தும், மக்களைப் பிளவுபடுத்தவும் முயற்சி செய்கின்றனர்" என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி குற்றம்சாட்டியுள்ளார்.

மத்தியப் பிரதேச மாநிலம் சத்தர்பூரில் பாகேஷ்வர் தாமில், புற்றுநோய்க்கான மருத்துவம் மற்றும் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்துக்கு பிரதமர் மோடி நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டினார். பின்னர் நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், "சில தலைவர்கள் குழு, மதத்தைக் கேலி செய்தும், மக்களைப் பிளவுபடுத்தவும் முயற்சி செய்கிறது.

பல நேரங்களில் அந்நிய சக்திகள் அவர்களுக்கு உதவி செய்து இந்தியாவையும் அதன் மதத்தையும் பலவீனப் படுத்த முயற்சிக்கின்றன. இந்து நம்பிக்கைகளை வெறுக்கும் மக்கள், பல நூற்றாண்டுகளாக ஏதோ ஒரு கட்டத்தில் வாழ்ந்து வருகின்றனர்"- என்றும் கூறினார். (எ)

# "விண்வெளியில் சதம் அடித்து இந்தியா சாதனை"

புதுடில்லி, பெப்.25

விண்வெளியில் பாரதம் 100 ஆவது சதம் அடித்திருக்கிறது. சந்திரயான், மங்கள்யான், ஆதித்யா எல்-1 என பல்வேறு வரலாற்று சாதனைகளை இஸ்ரோ படைத்திருக்கிறது என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மனதின் குரல் 119ஆவது நிகழ்ச்சி வானொலியில் நேற்று முன்தினம் ஒலிபரப்பானது. இதில் பிரதமர் மோடி கூறுகையில், "கிரிக்கெட்டில் சதம் அடிக்கும்போது ஏற்படும் அளவற்ற மகிழ்ச்சியை நாம் அறிவோம். அதைவிட பெருமகிழ்ச்சியாக கடந்த மாதம் இஸ்ரோவின் 100ஆவது ரொக்கெட் விண்ணில் வெற்றிகரமாக சீறிப் பாய்ந்தது.

நமது இஸ்ரோ விஞ்ஞானிகள் விண்ணில் தொடர்ந்து வெற்றிக் கொடி நாட்டுகின்றனர். சந்திரயான், மங்கள்யான், ஆதித்யா எல்-1, ஒரே ரொக்கெட்டில் 104 செயற்கைக் கோள்கள் என பல்வேறு வரலாற்று சாதனைகளை இஸ்ரோ படைத்திருக்கிறது. "- என்றார்.(எ)

# ட்ரம்ப், மோடியுடன் நான் சந்தித்தால் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தலா?

## இத்தாலி பிரதமர் மெலோனி கேள்வி



வாஷிங்டன், பெப்.25

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, நான் சந்தித்து பேசினால் ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் என்று இடதுசாரிகள் கூறுவதாகவும் இதை மக்கள் நம்புவதில்லை என்றும் இத்தாலி பிரதமர் மெலோனி தெரிவித்தார்.

அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற கன்சர்வேட்டிவ் (வலதுசாரி) அரசியல் நடவடிக்கை மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# இந்தியாவில் ஏழு திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கும் அமெரிக்கா

புதுடில்லி, பெப்.25

இந்தியாவில் ஏழு திட்டங்களுக்கு 750 மில்லியன் டொலர் அதாவது இலங்கை பெறுமதியில் சுமார் 22, 072 கோடி ரூபாய் மதிப்பிலான நிதியுதவியை அமெரிக்காவின் சர்வதேச மேம்பாட்டுக்கான நிறுவனம் வழங்கி வருவதாக இந்திய மத்திய நிதியமைச்சு அதன் 2023 - 24 ஆம் நிதியாண்டுக்கான அறிக்கையில் தெரிவித்துள்ளது.(எ)

# எதிர்க்கட்சி தலைவராக ஆதிஷி

புதுடில்லி, பெப்.25

இந்தியாவின் டில்லி சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவராக ஆதிஷி நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான அதிகாரப் பூர்வ அறிவிப்பை ஆம் ஆத்மி கட்சி நேற்று முன்தினம் வெளியிட்டது.

டில்லி சட்டப்பேரவைத் தேர்தலில், மொத்தம் உள்ள 70 இடங்களில் பா. ஜ. க. 48 தொகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி அமைத்தது.

22 இடங்களை மட்டுமே பெற்ற ஆம் ஆத்மி ஆட்சியை இழந்தது. இந்த நிலையில், சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவராக முன்னாள் முதல்வர் ஆதிஷி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதற்கான அதிகார பூர்வ அறிவிப்பை அந்தக் கட்சி வெளியிட்டுள்ளது.(எ)

# அமெரிக்காவிலிருந்து இந்தியா வந்த விமானத்துக்கு வெடிகுண்டு மிரட்டல்!

## இத்தாலியில் தரையிறக்கம்

ரோம்,பெப்.25

அமெரிக்காவிலிருந்து இந்தியாவின் தலைநகர் புதுடில்லிக்குப் புறப்பட்ட விமானத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதால் இத்தாலியில் தரையிறக்கப்பட்டது.

நியூயோர்க் நகரிலிருந்து புதுடில்லிக்கு நேற்று முன்தினம் மாலை அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானம் புறப்பட்டது. இந்த விமானத்தில் 199 பயணிகள், 15 ஊழியர்கள் என மொத்தம் 214 பேர் பயணித்தனர். துர்க்மெனிஸ்தான் வான் பரப்பில் பறந்துகொண்டிருந்த போது விமானத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. இதனால், இத்தாலிக்கு விமானம் திருப்பி விடப்பட்டது. இத்தாலி விமானப்படையின் போர் விமானங்கள் பாதுகாப்புடன் பயணிகள் விமானம் ரோம் நகரில் தரையிறக்கப்பட்டது. இதையடுத்து, விமானத்தில் அதிகாரிகள் தீவிர சோதனை நடத்தினர். இந்தச் சோதனையில் விமானத்தில் வெடிகுண்டு எதுவும் இல்லை என்பதும், வெடிகுண்டு மிரட்டல் வெறும் வதந்தி என்பதும் உறுதியானது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 6 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா அசத்தல் வெற்றி!




டுபாய், பெப்.25

பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது.

8 அணிகள் கலந்து கொண்டுள்ள சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் டுபாயில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதின.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி இந்தியாவின் பந்துவீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தது. இதன் காரணமாக பாகிஸ்தான் அணி 49. 4 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 241 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. பாகிஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக சவுத் ஷகீல் 62 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்தியா தரப்பில் குல்தீப் யாதவ் 3 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து 242 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா களமிறங்கியது. இந்தியாவின் தொடக்க வீரர்களாக ரோஹித் சர்மா மற்றும் சுப்மன் கில் களமிறங்கினர். இதில் ரோஹித் சர்மா 20 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.


இதையடுத்து சுப்மன் கில்லுடன் விராட் கோலி ஜோடி சேர்ந்தார். இந்த இணை நிதானமாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தது. சுப்மன் கில் 46 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஸ்ரேயஸ் ஐயர் களம் கண்டார். மறுபுறம் நிலைத்து நின்று ஆடிய விராட் கோலி அரைச்சதம் அடித்தார்.

இந்த நிலையில், ஸ்ரேயஸ் ஐயர் அரைச்சதம் அடித்த நிலையில் 56 ஓட்டங்களிலும், அடுத்து வந்த ஹர்த்திக் பாண்டியா 8 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். மறுபுறம் நிலைத்து நின்று விளையாடிய விராட் கோலி தனது சதத்தை பூர்த்தி செய்து அசத்தினார். இதன்படி, ஒருநாள் போட்டிகளில் தனது 51ஆவது சதத்தை கோலி பதிவு செய்தார்.

இறுதியில் இந்திய அணி 42. 3 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 244 ஓட்டங்கள் எடுத்தது. பாகிஸ்தான் அணி சார்பில் ஷஹீன் ஷா அப்ரிடி இரண்டு விக்கெட்களை வீழ்த்தினர்.

இதன்மூலம் பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது. (எ)

## மோசமான சாதனையில் முகமது ஷமி முன்னிலை




டுபாய், பெப்.25

மோசமான சாதனையில் ஜஸ்பிரீத் பும்ராவை பின்னுக்குத் தள்ளிய முகமது ஷமி முன்னிலை பெற்றுள்ளார்.பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் ஷமி இந்த மோசமான சாதனையை படைத்துள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் டுபாயில் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதின.இந்த போட்டியின் முதல் ஓவரை வீசிய இந்திய வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி அதில் 5 அகல பந்துகளை வீசினார். இதனையும் சேர்த்து முதல் ஓவரில் மொத்தம் 11 பந்துகள் வீசினார்.

இதன் மூலம் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் நீண்ட ஓவர் வீசிய இந்திய வீரர் என்ற மோசமான சாதனையை ஷமி படைத்துள்ளார். இதற்கு முன்னர் 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பும்ரா பாகிஸ்தானுக்கு எதிராக 9 பந்துகள் வீசியதே மோசமான சாதனையாக இருந்தது. தற்போது அவரை பின்னுக்குத் தள்ளி ஷமி இந்த மோசமான சாதனையில் முதலிடம் பிடித்துள்ளார். (எ)

## “விராட் கோலி நிச்சயம் 100 சதங்கள் அடிப்பார்”



லாகூர், பெப். 25

விராட் கோலி நிச்சயம் 100 சதங்கள் அடிப்பார் என்று பாகிஸ்தான் முன்னாள் வீரர் சோயப் அக்தர் தெரிவித்துள்ளார்.

“விராட் கோலியிடம் பாகிஸ்தா னுக்கு எதிராக விளையாடுகிறோம் என்று நீங்கள் சொன்னால் அவர் முழுமையாக தயாராகி சதத்தை அடிப்பார் என்பதை மீண்டும் நாம் பார்த்துள்ளோம். அவருக்குத் தலை வணங்கு கிறேன். சுப்பர் ஸ்டார் போன்ற அவர் வெள்ளைப்பந்து கிரிக்கெட்டில் மிகவும் சிறந்த வீரர். அவர் நவீன கிரிக்கெட்டில் ஜாம்பவான் என்பதில் சந்தேகமில்லை.

நேர்மையான மனிதனான அவருக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். தற்போது, ஒருநாள் கிரிக்கெட்டில் 14 ஆயிரம் ஓட்டங்களை கடந்துள்ள அவர் 100 சர்வதேச சதங்கள் அடிப்பார் என்று நம்புகிறேன். அவர் அதை செய்வதை நான் விரும்புகிறேன். இந்த பாராட்டுக்களுக்கு தகுதியானவரான அவருக்கு நான் வாழ்த்துகளை தெரிவிக்கிறேன்”- என்றார். (எ)

## ஐ.பி.எல். போட்டி மூலம் நான் களம் திரும்புவேன்

### ஆஸி அணி தலைவர் கம்மின்ஸ்

சிட்னி, பெப்.25

தற்போதைய நிலையில் ஐ. பி. எல். போட்டியின் மூலம் களம் திரும்புவதே எனது நோக்கம் என்று அவுஸ்திரேலிய டெஸ்ட் மற்றும் ஒருநாள் அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், “தற்போதைய நிலையில் இந்தியாவில் மார்ச் மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ. பி. எல். போட்டியின் மூலம் களம் திரும்புவதே எனது நோக்கமாகும். அடுத்த வாரத்தில் இருந்து பந்து வீச்சு பயிற்சியை தொடங்கவுள்ளேன். ஐ. பி. எல். போட்டிக்கு முன்பாக நல்ல நிலையை எட்ட முடியும் என்று நம்புகிறேன். ஐ. பி. எல். தொடரில் பந்து வீசுவது அடுத்து வரும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி மற்றும் மேற்கு இந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு நன்றாக தயாராக உதவிகரமாக இருக்கும்”- என்றார். (எ)



பாகிஸ்தானுக்கு எதிராக சதம்

## முதல் இந்திய வீரராக விராட் கோலி சாதனை

டுபாய், பெப்.25

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பாகிஸ்தானுக்கு எதிராக நேற்று முன்தினம் டுபாயில் நடைபெற்ற போட்டியில் விராட் கோலி சதம் அடித்து அசத்தினார்.

இதேவேளை, ஆட்டநாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டார்.சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் வரலாற்றில் பாகிஸ்தானுக்கு எதிராக இந்திய வீரர் சதமடிப்பது இதுவே முதல் முறையாகும். இதன் மூலம் விராட் கோலி வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

இதற்கு முன்னர் பாகிஸ்தானுக்கு எதிராக கடந்த சம்பியன்ஸ் கிண்ண தொடரில் ரோஹித் சர்மா 91 ஓட்டங்கள் அடித்திருந்ததே சாதனையாக இருந்தது.(எ)

## நாணயச் சுழற்சியில் அதிக முறை தோல்வி

### இந்தியா புதிய சாதனை

டுபாய், பெப்.25

அதிக முறை நாணயச்சுழற்சியில் தோல்வியைத் தழுவிய அணி என்ற மோசமான சாதனையை இந்தியா படைத்துள்ளது.

ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

ஆனால், நாணயச்சுழற்சியில் தோல்வியடைந்த இந்தியா இதனையும் சேர்த்து ஒருநாள் கிரிக்கெட்டில் தொடர்ச்சியாக 12 முறை தோல்வியடைந்துள்ளது. கடைசியாக 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதியில் நியூசிலாந்துக்கு எதிராக நாணயச்சுழற்சியில் வென்றிருந்த இந்திய அணியால் அதன் பின்னர் நாணயச்சுழற்சியில் வெல்ல முடியவில்லை. இதன் மூலம் தொடர்ச்சியாக அதிக முறை நாணயச்சுழற்சியில் தோல்வியைத் தழுவிய அணி என்ற மோசமான சாதனையை இந்தியா படைத்துள்ளது. இதற்கு முன்னர் நெதர்லாந்து 11 முறை இழந்திருந்ததே மோசமான சாதனையாக இருந்தது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3000ஆவது...

இதன்போது காணாமல் ஆக்கப்பட்ட தங்களது உறவுகளின் உருவப்படத்தை தாங்கியவாறும், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளை தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

## வவுனியாவை...

பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

தனுஷ்கோடியில் உள்ள அரிசல் முனை அருகே படகொன்றில் இவர்கள் தரையிறங்கியுள்ளதாக தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)

## மீனவர்களை...

கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தொடர்ச்சியாக கைது செய்து வருகின்றனர். இலங்கை அரசை நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற நிலையில் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

குறித்த கைது நடவடிக்கைகள் ஊடாக இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை கட்டுப்படுத்தப்படுகின்றதா? என்ற விடயம் கேள்விக்குறியாகவே இருக்கிறது. நாங்கள் தொடர்ந்தும் இந்திய மீனவர்களுக்கு தெரிவித்து வருகின்றோம். தொடர்ந்தும் எமது கடல் எல்லையை தாண்டி வராதீர்கள் என்ற விடையத்தை அழுத்தமாக தெரிவித்துள்ளோம்.

இந்திய அரசுக்கும் தெரியப்படுத்தி உள்ளோம். தமிழக அரசு சட்ட விரோதமான முறையில் இலங்கைக் கடற்பரப்பில் நுழைகின்ற மீனவர்களைக் கட்டுப்படுத்தத் தவறியுள்ளது.

அத்துடன் மீறி நுழைகின்ற நிலையிலே தொடர்ச்சியாக தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் இலங்கைக் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்படுகின்றனர். ஞாயிற்றுக்கிழமை அத்துமீறி நுழைந்த 32 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த 32 மீனவர்களின் நிலையை நாங்கள் நினைக்கின்றபோது உண்மையில் வேதனையாகவே உள்ளது. சக மீனவர்கள் என்ற அடிப்படையில் அவர்களின் கைதுக்கு நாங்கள் வேதனை அடைகிறோம்.

எனினும் கடற்படை முன்னெடுக்கும் கைது நடவடிக்கைகளை நாங்கள் எதிர்க்க முடியாது. குறித்த நடவடிக்கை மூலமாகவே எமது கடல் வளத்தை பாதுகாக்க முடியும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது. கடற்படையினர் இரவு பகல் பாராது எமது கடல் வளத்தை பாதுகாக்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அவர்களுக்கு மீனவர்கள் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழக அரசு மீனவர்கள் விடயத்தில் அக்கறை செலுத்தவேண்டும். எல்லை தாண்டுவதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அல்லது எல்லை தாண்டும் இந்திய மீனவர்களுக்கு தமிழக அரசு தண்டனை வழங்க வேண்டும். எதிர்காலத்தில் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதை விடுத்து எல்லை தாண்டும் நடவடிக்கையை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

எதிர்காலத்தில் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்படும் சம்பவங்கள் இல்லாமல் போக வேண்டும். அதற்கான ஒரே தீர்வு இந்திய மீனவர்கள் இலங்கை எல்லையை தாண்டாமல் இருப்பதே ஆகும். அவர்கள் இத்தொழில் முறையை கைவிட்டு, இலங்கை எல்லையை தாண்டுவதையும் அவர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

## ரெலோவை...

கூட்டமைப்பாக இருந்த ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் கட்சிகளும் இணைந்து கலந்துரையாடலை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-05)

## படைகளில்...

அதிகாரிகள் தொடர்புபட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படைகளிலிருந்து தப்பியோடியவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பாதுகாப்பு அமைச்சு, குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கும், சட்டம் மற்றும் ஒழுங்கை நிலை நிறுத்துவதற்கும் உறுதியாக செயல்படுகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தேசிய பாது...

கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த வரவு செலவுத் திட்டத்தில் இருந்தேனும் சரியான வறுமை ஒழிப்புத் திட்டத்தை அரசாங்கத்தால் அடையாளம் காண முடியாது போயுள்ளது.

கொள்ளை, ஊழல், சிறுவர் துஷ்பிரயோகம் நடக்கும் பயங்கரமான சூழ்நிலை உருவாகியுள்ளன. குழந்தைகள் முதல் இளம் தலைமுறையினர் முதல் முதியோர்கள் வரை என சமூகத்தில் சகலரும் அச்சத்தோடு வாழ வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

பாதாள உலகக் கும்பல் அல்லது போதைப்பொருள் காரணமாக நீதிமன்ற வளாகத்திற்குள் நுழைந்து, கொலை செய்யும் அளவுக்கு இந்த கொலைகாரர்களுக்கு அச்சமும் பயமும் அற்றுப்போவது எங்ஙனம்? என்பதில் பிரச்னை காணப்படுகிறது.

சட்டம் கோலோச்சுமாக இருந்தால், நீதி நிலைநாட்டப்படுமாக இருந்தால், குற்றவாளிகள் குற்றம் செய்ய பயப்படுகிறார்கள். இந்தக் கொலைகள், வன்புணர்வுகள், சிறுவர் துஷ்பிரயோகங்கள், கொள்ளைகள், குற்றச்செயல்கள் போன்றவற்றை இச்சமூகத்தில் நடத்தும் குழுக்கள் கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும்.

கொடூரம் தலைவிரித்தாடும், கொலை கலாசாரம் இயங்கிக் கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில், தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய, இந்த அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள்கூட மேலதிக வகுப்புகளுக்குச் செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளது.

இதனால் தேசிய பாதுகாப்பு ஆபத்தில் உள்ளது. இதுபோன்ற கொலைக் கும்பல்கள் சுதந்திரமாக உலவும் வரை, நாட்டு மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ முடியாது என்பதில் சந்தேகமில்லை. கொலைகாரர்கள் மக்களின் சுதந்திரத்தை சீர்குலைக்க இடமளிக்க முடியாது.

நாட்டின் பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில், நாட்டில் நீதி மற்றும் நியாயத்தை நிலைநாட்டவும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும் ஐக்கிய மக்கள் சக்தி அதிகபட்ச ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கும்

மிகவும் புத்திசாலித்தனமாக மக்களை ஏமாற்றப்பட்டு வருகின்றனர். இன்று நாட்டில் மக்கள் நம்பிக்கையிழந்தும், விரக்தியடைந்தும் போயுள்ளனர்.

சட்டம் ஒழுங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு, தேசிய பாதுகாப்பு பலப்படுத்தப்படும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் காணப்பட்டது. பெருந்தோட்டக் கைத்தொழில், விவசாய உற்பத்தி, சுயதொழில் துறை உட்பட சமூகத்தின் சகல பிரிவினருக்கும் பெரும் நம்பிக்கைகளை ஏற்படுத்தினர்.

இன்று மக்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி, பல இடர்பாடுகளுக்கு மத்தியில் தமது வாழ்க்கை முன்னெடுத்து வருகின்றனர். வாழ்க்கைச் சுமையால் தாங்க முடியாத நிலைக்கு ஆளாகியுள்ளனர்-என்றார். (அ)

# உள்ளூராட்சி தேர்தல் குறித்து இவ்வாரம் கலந்துரையாடல்!



கொழும்பு, பெப்: 25

உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்காகத் தேர்தல்கள் ஆணைக்குழு நாளை மறுதினம் 27 ஆம் திகதி கூடவுள்ளது.

இதன்போது, உளளூராட்சி மன்ற தேர்தலுக்கான திகதிகள் மற்றும் நேரங்கள் குறித்துக் கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னரே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வாக்கெடுப்பு திகதி அறிவிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், அம்பாறையில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்தார்.

இந்த நிலையில், எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நிச்சயமாக நடைபெறும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் பிரதி அமைச்சர் ருவன் செனரத் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதியை அரசாங்கம் ஏற்கனவே ஒதுக்கியுள்ளதாக ஜனாதிபதி அனுரகுமார திஸநாயக்க நேற்று முன் தினம் கண்டியில் தெரிவித்திருந்தார்.

அத்துடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எந்த சட்டத் தடையும் இல்லை என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (அ)

## தரைவழி...

தரைவழியான பயணம் மேற்கொண்டிருந்ததாகவும் அதற்கு 7-8 மணித்தியாலங்கள் வரை ஆகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதன்படி, ஜனாதிபதி ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்தினால், முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு செலவிடக்கூடிய பெறுமதியான நேரத்தை மிச்சப்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

புதிய அரசாங்கத்தின் கீழ் சபாநாயகரின் உத்தியோகபூர்வ இல்லம் மூடப்பட்டுள்ளதாகவும், அது பயன்படுத்தப்படாது மூடுவதன் மூலம் அரசாங்கத்தால் 2 மில்லியன் ரூபாயைக்கூட சேமிக்க முடியாது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் சலுகைகளை விட்டுக்கொடுப்பது விரும்பிய பலன்களைத் தராது என்றும் அவர் கூறினார். (அ)

## மலையக...

- செலவு திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மனோ கணேசன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மலையக மக்கள் எனும் அடையாளத்தை முதன்முதலில் ஆவணம்மூலம் கொண்டுவந்தது நாங்கள்தான். தோட்டத் தொழிலாளர்களை தொழிலாளர்களாக அல்லாமல் பங்காளிகளாக மாற்றுவதற்குரிய முன்மொழிவை நாம் முன்வைத்துள்ளோம். அதனை தற்போதைய அரசாங்கம் கவனத்தில் எடுக்கவேண்டும்.

ரணசிங்க பிரேமதாஸவால் மலையகத்துக்கு ஒரு வீடேனும் கட்டப்படாமை தொடர்பில் அவரது மகன் சஜித் பிரேமதாஸ மன்னிப்பு கூறவேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி எம். பியொருவர் குறிப்பிடுகின்றார். இது வேடிக்கையாக உள்ளது.

மலையக மக்களுக்கான தேசிய மக்கள் சக்தி அரசின் காணி கொள்கை என்ன? எத்தனை பேர்ச்சஸ் வழங்கப்படும்? வாழ்வாதாரத்துக்குரிய காணி எப்படி? அதேபோல பெருந்தோட்டப்பகுதிகளில் கட்டப்படும் வீடுகள் மாடி வீடா அல்லது கோடி வீடா என்பதை பற்றி அறிவியுங்கள். மலையகத்துக்காக தற்போதைய அரசாங்கம் எதையும் செய்யவில்லை-என்றார். (அ)

## மூத்த எழுத்தாளர்...

உள்ள தனது இல்லத்தில் அவர் காலமானார்.

தென்மராட்சி - மட்டுவிலை சொந்த இடமாகக் கொண்ட அவர் ஆசிரியராகவும் பின்னர் உதவி கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றியிருந்தார்.

1966ஆம் ஆண்டு எழுத்துத் துறைக்குள் பிரவேசித்த அவர் பல சிறுகதைகளையும் நாவல்களையும் எழுதியுள்ளார். அத்துடன், "வரலாறு அவளைத் தோற்றுவிட்டது", "வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்", "பாலைவனப் பயணிகள்", "ஆறுகள் பின்னோக்கி பாய்வதில்லை", என்ற நாவல்கள் "மண்ணின் முனகல்", "ஒரு பிடி மண்" என்ற சிறுகதைத் தொகுப்புகள் உட்பட 13 நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

இவரின் "எழுதப்படாத வரலாறு" 2009ஆம் ஆண்டு தரம் 8 தமிழ் மொழியும் இலக்கியமும் பாடநூலில் இடம்பெற்றிருந்தது.

2006 - 2008ஆம் ஆண்டுக்குரிய கனகசெந்தி கதா விருது, 2011இல் கலாபூஷணம் விருது அவருக்கு வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மின்சார...

ஏற்பட்டுள்ளது.

கட்டணத்தை அதிகரிக்க வேண்டி ஏற்படலாம். ஆனால், அதற்கு எமக்கு விருப்பம் இல்லை.

மின்சார சபையின் செலவினங்களை கையாண்டு தொடர்ந்தும் முன்கொண்டு செல்வதாக இருந்தால் கட்டாயமாகக் கட்டண சீரமைப்பு ஒன்றுக்குச் செல்ல வேண்டியேற்படும் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை 2024 இன் 36ஆம் இலக்க சட்டத்தைத் திருத்தியிருக்கின்ற முறைமை சட்டத்துக்குப் புறம்பானது என்று தெரிவித்து, மின்சாரப் பாவனையாளர்கள் சங்கத்தினால், சட்ட ஒழுங்கமைப்பு திணைக்களத்தில் நேற்று முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள், அரசாங்கம் தொடர்ந்தும் அனல் மின்னுற்பத்தியையே ஊக்குவிப்பதாகவும், காற்றாலை அல்லது சூரிய சக்தி போன்ற புதுப்பிக்கத்தக்கச் சக்தி வளத்தை நோக்கி நகர விருப்பமின்றி இருப்பதாகத் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# 4 நாட்களுக்குள் 8 கொலைகள்!

## தேசிய பாதுகாப்பில் கூடுதலான கவனம் செலுத்தக் கோருகிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, பெப். 25

'கடந்த 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையிலான 4 நாட்களில் 8 கொலைகள் நடந்துள்ளன. தேசிய பாதுகாப்புக்கு இது பெரும் பிரச்னையாக அமைந்திருந்தாலும், அது ஒரு பிரச்னையல்ல என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். பாதாள உலக கும்பல்களுக்கு இடையே இடம்பெற்று வரும் இந்த கொலைக் கலாசாரம் தேசிய பாதுகாப்புக்குப் பிரச்னையாகக் காணப்படுகிறது." என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அண்மைய தினத்தில் நீதிமன்றத்தினுள் நடந்த மிலேச்சத்தனமான கொலையுடன் தொடர்புடைய பெண்ணின் புகைப்படங்கள் உள்ளிட்ட தகவல்கள் புலனாய்வு தரப்புக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

இது தொடர்பிலான புலனாய்வு அறிக்கைகளை ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. குறித்த கொலை தொடர்பிலான தகவல்கள் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்றிருந்தன. இவ்வாறு தகவல்கள் கிடைக்கப்பெற்றிருந்தும் பாதுகாப்பு குறைபாடுகள் ஏற்பட்டமை குறித்து தெளிவான விளக்கம் இங்கு வழங்கப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தினார்.

மிலேச்ச கொலையாளிகளின் இந்தச் செயல்கள் பெரும் பிரச்னையாக காணப்படுகின்றன. புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் கிடைக்கப்பெற்ற பிறகு அது குறித்து நடவடிக்கைகளை எடுக்க இதைவிடவும் முறையான திட்டமொன்றை முன்னெடுக்கவேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (அ)

## நீதிமன்ற துப்பாக்கிச்சூடு; விசாரணை தொடர்கிறது

### அமைச்சர் நளிந்த அறிவிப்பு



கொழும்பு, பெப். 25

புதுக்கடை நீதிமன்ற வளாகத்திற்குள் கடந்த வாரம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் மற்றும் தகவல்களை சபையில் வெளியிட முடியாது என சுகாதார மற்றும் ஊடகத் துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதுக்கடை நீதிமன்ற வளாகத்திற்குள் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக இதனுடன் தொடர்புடைய பாதுகாப்பு தரப்பினர் மற்றும் நீதிமன்ற தரப்பினருடன் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன-என்றார். (அ)

## பல்கலை பேராசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும்!

### அமைச்சர் அருண கருணாதிலக்க

கொழும்பு, பெப். 25

பல்கலைக்கழக பேராசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி அமைச்சர் அருண கருணாதிலக்க தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பல்கலைக்கழக பேராசிரியர்களின் சம்பள தொகையானது 175,650 வரையில் அதிகரிக்கின்றது. 2027ஆம் ஆண்டு இந்த தொகை 237,547 ஆக அதிகரிக்கிறது.

இந்த புதிய கணிப்பீட்டுக்கு அமைவாக பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கான கல்விசார் கொடுப்பனவு 316,033 ரூபாவாக அது அதிகரிக்கப்படவுள்ளது.

எனவே தற்போது இருக்கும் ஆராய்ச்சி கொடுப்பனவாக தற்போது இருப்பது 4,170 ரூபாயாகும். இது புதிய சம்பள திருத்தத்துக்கு அமைவாக பார்க்கின்ற போது ஆராய்ச்சி கொடுப்பனவாக 48,506 ரூபாய் வரை அதிகரிக்கப்படவுள்ளது-என்றார். (அ)

## கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக்கொலை; சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

கொழும்பு, பெப். 25

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் கடந்த புதன்கிழமை பாதாள உலக கும்பலைச் சேர்ந்த கணேமுல்ல சஞ்சீவ என்பவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்த மூன்று சந்தேக நபர்களை எதிர்வரும் மார்ச் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்கள் மூவரும் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரால் நேற்று திங்கட்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலியினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 2ஆம் வாசிப்புமீதான வாக்கெடுப்பு இன்று!

கொழும்பு, பெப். 25

2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் வியாழக்கிழமை முதல் எதிர்வரும் மார்ச் மாதம் 21 ஆம் திகதிவரை வரவு - செலவு திட்டம் மீதான குழுநிலை விவாதம் நடத்தப்படவுள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கடந்த திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் முன்வைத்தார். வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் இன்று செவ்வாய்க்கிழமையுடன் நிறைவடையவுள்ள நிலையில் வாக்கெடுப்பும் நடைபெறவுள்ளது. (அ)

## போதைப்பொருளுடன் இந்திய பிரஜை கைது

கொழும்பு, பெப். 25

சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 2 கோடியே 30 இலட்சம் ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருளுடன் இந்தியப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார்.

73 வயதுடைய இந்திய பிரஜை ஒருவரே கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரான இந்திய பிரஜை தாய்லாந்தின் பாங்கொக் நகரத்திலிருந்து நேற்றுக் காலை 11.00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இதன்போது, விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப்பொதியில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கிலோ 908 கிராம் குஷ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பின்னர், கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீர்கொழும்பு நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து சந்தேக நபரை பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

### கைதான 32 தமிழக மீனவர்களுக்கு மறியல்

# இராமேஸ்வரம் கடற்றொழிலாளர் காலவரையறையற்ற போராட்டம்!

சென்னை, பெப். 25

இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட தங்கள் சக மீனவர்களை விடுவிக்கவேண்டும் எனக் கோரிக்கைகளை முன்வைத்து இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் நடந்த அவசர ஆலோசனைக் கூட்டத்தில், இலங்கையில் தமிழ்நாட்டு மீனவர்களின் படகுகள் ஏலம் விடப்படுவதைத் தடுத்து மீட்கவேண்டும் என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக நுழைந்து தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு கைதான 32 இந்திய மீனவர்கள், மன்னார் நீதவான் நீதிமன்றின் உத்தரவின் பேரில் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதனை அடுத்து 32 இந்திய மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



அண்மைக் காலங்களில் தொடர்ச்சியாக எல்லை தாண்டும் இந்திய மீனவர்கள் இலங்கை அரசால் கைது செய்யப்படுவது அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசின்மீது மக்களின் எதிர்பார்ப்பு அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 25

தேர்தலுக்கு பின்னர் அரசாங்கத்திற்கான பொதுமக்களின் எதிர்பார்ப்பு வேகமாக அதிகரித்துள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

அதன்படி, கடந்த ஆண்டு ஜுலை மாதத்தில் 24 வீதமாக காணப்பட்ட அரசாங்கத்திற்கான பொதுமக்களின் எதிர்பார்ப்பு தற்போது 62 வீதமாக அதிகரித்துள்ளது.

"நாடு எண்ணும் விதம்" என்ற தொனிப்பொருளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் புதிய பெறுபேறுகளின் அடிப்படையில் இவ்விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக வெரிட்டே ரிசேர்ச் ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் 7 வீதமாக காணப்பட்டதாகவும் இவ்வாண்டின் அது 62 வீதமாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்க அதிகரிப்பாக எடுத்துக்கொள்ள முடியும் எனவும் வெரிட்டே ரிசேர்ச் சுட்டிக்காட்டியுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு முதல் முறையாக, பெரும்பான்மையான மக்கள், அதாவது 55 வீதமானோர், இலங்கையின் பொருளாதார நிலைமை மேம்பட்டு வருவதாக நம்புவதாக வெரிட்டே ரிசேர்ச் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

எனினும், நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரம் இன்னும் பலவீனமான நிலையில் இருப்பதாக 47 வீத மக்கள் நம்புவதாக வெரிட்டே ரிசேர்ச் தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் அமைந்துள்ள ஈழநாடு அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org